# கழைக் கூத்தியின் காதல்

## காட்சி—ஒன்று

இடம்: தொண்டை நாட்டுப் புழற்கோட்டம் சார்ந்த அப்பனூர்த் தோட்டக்காடு.

நேரம்: மாலை

கதை உறுப்பினர்: முத்து நகை என்னும் கழைக்கூத்தி, அவள் தோழிமார், மன்னன் சடையநாதன், அவன் அமைச்சன் முதலியவர்கள்.

நிகழ்ச்சி: பேச்சும் விளையாட்டும்

முத்துநகை: பாருங்கள் அத்திப் பழக்குலை; அழகிய மாணிக்கத் தொங்கல்!

முள்ளி: நம் கண்ணைப் பறிக்கிறது; நம்மால் பறிக்க முடியுமா அதை?

பொன்னி: எட்டவில்லையானால் என் தோளின் மேல் ஏறு.

(முள்ளி பொன்னியின் தோள்மேல் ஏறிப் பழக் குலைகளைப் பறித்துப் போடுகிறாள்)

வள்ளி: (அத்திப் பழங்களை வாயில் தள்ளிக்கொண்டே) முள்ளி உனக்கு மிகுந்த துன்பம்.

முத்துநகை: ஆமாம் வள்ளி, அவளுடைய துன்பம் உனக்கு இன்பம். பழம் பறித்துப் போட்டவள் இறங்கி வருமுன் பத்து இருக்கும் நீ விழுங்கியவை.

வள்ளி: ஐயையோ நான் உண்டவை ஏழெட்டுத்தான் இருக்கும்.

முள்ளி: அப்படியானால் நாலைந்துதான் மீதியிருக்கும் (முள்ளி இறங்கி வந்து மீதியுள்ள பழங்களை எண்ணுகிறாள்)

பொன்னிக்கு ஒன்று. இந்தா (பொன்னி பெற்றுக் கொள்கிறாள்)

வள்ளி: நான் ஒன்று எடுத்துக் கொள்ளுகிறேன். மீந்தவை மூன்று. அவை முத்து நகைக்கு (முத்து நகைக்குக் கொடுக்கிறாள் முள்ளி)

முத்துந: துன்பப்பட்டுப் பறித்தவளுக்கு ஒன்று. சும்மா நின்ற எனக்கு மூன்று (வாங்க மறுக்கிறாள்)

முள்ளி: இதிலென்ன துன்பம்? ஒன்று போதும் எனக்கு.

முத்துந: எனக்கும் ஒன்று போதும்.

முள்ளி: சரி உனக்கும் ஒன்று. மீதி இரண்டு பழங்களை நான் குறிப்பிடுகிறபடி உன் கையாலேயே கொடு. ஒன்று யாப்புத் தவறாமல் பாப்புனையும் உன் வல்லமைக்கு. மற்றொன்று உன் கழைக்கூத்தின் திறமைக்கு.

பொன்னி: நல்லபரிசு! பெற்றுக் கொள்ளேடி முத்துநகை? அறுபது அடி நீளத் தறி நட்டு, அதன் நுனியில் இருபது அடி நீள மூங்கில் வளை கட்டிப், பறை முழங்கி, ஊர் கூட்டி, ஆடச் சொன்னார்கள் உன்னை. என் கண்ணே, நீ காலுக்குச் சிறாய் மாட்டி, மேலுக்குக் கச்சை இறுக்கி, உடுக்கை போன்ற உன் இடுப்பு அசைய நடந்து சென்று அந்த நெடுந்தறி மேல் தலைகீழாக ஏறினை; வளைந்து கொடுக்கும் மூங்கில் நுனியை ஒரு கையால் பற்றினை. உன்னுடல் வானத்தில் தொங்கும் அத்திப் பழம்; கண் கவர்ந்த மாணிக்கத் தொங்கல்.

முள்ளி: உன் புகழ் உனக்குத் தெரியாது. அன்றைக்கு நம் அப்பனூர் அதிர்ந்தது, உன் ஆடல் கண்ட வியப்பால்.

வள்ளி : ஒன்றின் மேல் ஒன்றாகப் பத்துக் குடங்கள் அடுக்கி, மேற் குடத்தில் நீ நின்றாடிய பாங்கும், உடன் பாடிய தென்பாங்கும், பாட்டன் காலத்துப் பகைவரையும் உன் வீட்டின்வாயிலில் கொண்டு வந்து சேர்த்துவிட வில்லையா!

(முத்துநகை, எதிரில்—தொலையில் பார்வை செலுத்துகின்றாள்)

முத்துநகை : அதோ பாருங்கள், திறந்த வெளியில் பறந்து வரும் குதிரைகளின் வரிசை, வில்லில் விடுபட்ட அம்புகள்.

முள்ளி : முத்துநகை! முத்துநகை! மன்னர் சடையநாதர்! அமைச்சர்! படைத்தலைவர்! உடற் காப்பாளர்! வருகின்றார்கள். நாம் மறைந்து கொள்வோம்.

(தோழிமார் மரங்களில் பதுங்கிக் கொள்கிறார்கள். முத்துநகை, அருகில் நீண்டு தாழ்ந்த ஆலின் கிளை மேல், அதன் விழுதைப்பற்றி ஏறிக் கொள்ளுகின்றாள். அரசன் சடையநாதனை அவள் கண்கள் உற்று நோக்குகின்றன. முத்துநகை மறைந்திருக்கும் கிளையின் கீழாக மன்னனின் குதிரை செல்லுகிறது! முத்துநகை, மன்னனின் மணிமுடியைத் தன் இரு கால்களால் கழற்றிக் கொள்கின்றாள். முடி பறி போனதும் தெரியாமல் குதிரையை முடுக்கிக் கொண்டு செல்லுகின்றான் சடையநாதன்.

## காட்சி—இரண்டு

இடம் : தொண்டை நாட்டுப் புழற்கோட்டத்தின் அரண்மனை வாயில்.

நேரம் : ஷை

கதை உறுப்பினர் : சடையநாதன்; அவனைச் சார்ந்த அமைச் சர் முதலியோர்.

நிகழ்ச்சி : மானக் கேடும் மனக் கொதிப்பும்.

அமைச்சர் : மணிமுடி எங்கே?

அரசன் : (குதிரையை விட்டு இறங்கித் தன் தலையைத் தடவிப் பார்த்துத் திடுக்கிட்டு) வழியில் தவறி விழுந்ததா? என்ன மானக்கேடு! உடற்காப்பாளர் உடன் வந்தீர்கள்!

உடற்கா : வழியில் தவறி விழவில்லை.

அரசன் : பொய். கடமை தவறியவர்கள் பேசும் பேச்சு; விரைவாக உணவை முடித்து வாருங்கள்.

உடற்கா : விடைதர வேண்டுகிறோம், உணவருந்துவதற்கல்ல.

அரசன் : பசி வருத்தம் இருக்குமே?

உடற்கா : கொல்லாது!

(உடற்காப்பாளர்கள் தம் குதிரைகளில் பாய்ந்தேற அவை மான் விசை கொள்ளுகின்றன.)

அரசன் : மணிமுடி மறைந்தது! பகைவர் கேட்டால் சிரிப்பார்கள். நான் வழியில் உறங்கவில்லை. என் உணர்வு மழுங்கவில்லை. அப்படியிருந்தும் தலையில் முடியில்லை. மறைந்தது தெரியவில்லை. என் பகைவரின் கைவரிசையா?

அமைச் : உயிரை அல்லவா பறித்திருப்பார்கள் வேந்தே!

அரசன் : எல்லைப் புறத்து விடுதியில் இறங்கினோம், சிறிது உறங்கினோம். எல்லைப்புற மக்களைப் பிறகு கண்டோம். 'விழிப்போடு இருங்கள்' என்று விண்டோம், சிற்றுணவு உண்டோம். கழற்றி வைத்த மணிமுடியை எடுத்தணிந்து தானே குதிரை மேல் ஏறினேன்.

அமைச் : நினைவிருக்கிறது எனக்கு! படைத்தலைவர் எடுத்துக் கொடுத்தார். அதை உடற்காப்பாளர் துடைத்துக்

கொடுத்தார். முடிபூண்டபடியே குதிரை மீது ஏறினீர்கள்.

மன்னன் : என்ன வியப்பு! மணிமுடி போனதை அறியாத நான் மாநிலம் ஆள்வதெப்படி? இன்று மணிமுடி பறி கொடுத்தேன்; இதற்கு முன் என்னென்ன பறி கொடுத்தேனே? இனி என்னென்ன பறி கொடுப்பேனே?

எனக்குப் பெரும்படை இருந்தென்ன, என் கண் மூடித்தனத்தின் அடிப்படை மீது?

வல்லமையற்ற என் பகைவர்கள், என் திறமைக் குறைவால் வல்லமை அடைகிறார்கள். அமைச்சரே! என்ன எண்ணத்தில் ஆழ்ந்திருக்கின்றீர்?

அமைச் : நம் குதிரைகள் ஒரு பெரிய ஆலின் அடிவழியாக வந்தன.

மன்னன் : விழுது தடுத்ததால் விழுந்திருக்கவும் கூடும் என்கிறீர். அப்படியானல் அப்போது நான் பஞ்சு மெத்தையிலா தூங்கிக் கொண்டிருந்தேன்? சிரிப்பு வருகிறது கொதிப்பையும் தாண்டிக் கொண்டு!

அமைச் : நாம் அங்கே போகத்தான் வேண்டும்.

மன்னன் : பசித்துன்பம்... ஆம்... உயிரையா போக்கிவிடும்!

(அரசன் குதிரை மேற் பாய்ந்தேறப் படைத் தலைவனும், அமைச்சனும் பின்பற்றக்குதிரைகள் விரைகின்றன.)

## காட்சி—மூன்று

இடம் : அப்பனூர்த் தோட்டம் காடு.

நேரம் : மாலை

கதை உறுப்பினர் : முத்துநகை, தோழிமார்.

நிகழ்ச்சி : அச்சமும் வியப்பும்.

முள்ளி : இந்தக் கிளைமேல்தானே ஏறி மறைந்தாள்!

பொன்னி : ஏடி முத்துநகை!

(தோழிமார் முத்துநகைப் பேர் சொல்லிக் கூவி அழைக்கிறார்கள் பன்முறை)

வள்ளி : அவள் இந்தக் கிளையில் ஏறியதைப் பார்த்தோம் நன்றாக! அதைவிட்டு அவள் இறங்கியிருந்தால் நமக்குத் தெரியாமலா போகும்? இங்குதானே இருந்தோம்.

(அவள் ஏறிய கிளையை அண்ணாந்து பார்த்தபடி அவளைக் கூவிக் கூவி அழைக்கிறார்கள் தோழிகள்.)

பொன்னி : நமக்குத் தெரியாமல் இறங்கி ஓடியிருப்பாள்.

வள்ளி : ஓடி மறைந்து கொண்டிருப்பாள் நம்மை ஏமாந்தவர்களாக்க.

முள்ளி : இருக்கும். இருக்கும், முத்துநகை, நாழிகை ஆகிறது வீட்டுக்குப் போகிறோம் வந்துவிடு.

(அனைவரும் சுற்று முற்றும் பார்க்கிறார்கள் முத்து நகை வருவாள் என்று)

பொன்னி : முத்துநகை, வீட்டுக்குப் போகிறோம், வந்துவிடு இன்னும் விளையாடாதே...... நாம் போகலாமா, நாம் போகலாமா வள்ளி, முள்ளி?

முள்ளி : போகலாம்.

(மூவரும் அவ்விடத்தை விட்டு நகர்கிறார்கள். ஆலின் கிளை அசைகிறது மேலும் கீழுமாக, மூவரும் கிளையை வியப்புடன் பார்க்கிறார்கள்.)

பொன்னி : கிளை ஆடுகிறது; காற்றால் அல்ல.

முள்ளி : தானே ஆடவில்லை கிளை உந்தப்படுகிறது. கிளையில் அவளும் இல்லையே.

வள்ளி : உந்தப்படுகிறது. யாரால்? அதெல்லாம் இல்லை. நீண்டு தாழ்ந்த கிளையைச் சிறிய காற்றும் கீழ் மேலாக அசைக்கும், போகலாம் வாருங்கள்.

(கிளையை நோக்கியபடியே வீடு செல்ல நாலடி எடுத்து வைக்கிறார்கள் தோழிகள். ஆலின் கிளையில் இலை தழைந்த ஒரு சிறு கிளை கல கல வென்று உலுக்கப்படுகிறது.)

வள்ளி : இதென்ன! எனக்கு அச்சமா யிருக்கிறது!

பொன்னி : பேயா இருக்குமோ?

முள்ளி : காணோமே ஒன்றையும்!

வள்ளி : பேய் கண்ணுக்கா தெரியும்?

முள்ளி : பின் எதற்குத் தெரியும்?

வள்ளி : அதன் ஓசைதான் காதில் கேட்கும்.

முள்ளி : நம் குரல் அதற்குக் கேட்குமா?

வள்ளி : கேட்கும்.

முள்ளி : அப்படியானால் கூப்பிடு. எங்கே எங்கள் முத்து நகை என்று கேட்டுப் பார்க்கலாம்.

பொன்னி : நீதான் கூப்பிட்டுக் கேள். நாங்கள் வீட்டுக்கு ஓடி விடுகிறோம்.

முள்ளி : பேயே,

('ஏன்' என்று ஒரு கீச்சுக் குரல் கேட்கிறது. மூவரும் அச்சத்தால் சிறிது தொலைவில் ஓடித் திரும்பிப் பார்க்கிறார்கள். மெல்ல மெல்ல மீண்டும் திரும்பி வருகிறார்கள்.)

முள்ளி : பேயே எங்கள் முத்துநகை எங்கே?

('அவளை நான் விழுங்கிவிட்டேன்' என்ற கீச்சுக் குரல் கேட்கிறது. 'ஐயையோ' என்று மூவரும் விழுந்

தடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். "ஓடாதீர்கள் ஓடாதீர்கள் நான்தான் முத்துநகை'' என்ற குரல் கேட்கிறது.ஓடியவர்கள் திரும்பிப்பார்த்து நிற்கிறார்கள்! மெதுவாக ஆலமரத்தை நோக்கி வருகிறார்கள். ஆலின் கிளையிலிருந்து மணி முடியும் கையுமாக முத்துநகை குதிக்கிறாள்)

வள்ளி : நம் முத்துநகைதான்.

முள்ளி : எங்கே மறைந்திருந்தாள்! மறைந்திருக்க அந்தக் கிளையில் இடமேது?

பொன்னி : முத்துநகைதானா, வேறு.........

முத்துந : பேயல்ல, முத்துநகைதான்? அச்சங்கொள்ளிகள் நீங்கள்.

வள்ளி : இதென்ன கையில்? ஒளி மணிகள், அடடா தங்க மரக்கால்.

பொன்னி : இல்லை, மணிமுடி! ஏது? ஏது முத்துநகை?

முத்துந : குதிரைமேற் சென்ற அரசர் முடியைக் கிளைமேல் இருந்தபடி கழற்றிக் கொண்டேன்

(அனைவரும் கையால் வாயைப் பொத்திக் கொள் கிறார்கள் கண்ணில் அச்சம்)

பொன்னி : என்ன செயல்செய்தாய் முத்துநகை?

(முத்துநகை, மணிமுடியை உற்றுநோக்கிப் புன்னகை புரிகிறாள்; அதைத் தன் மார்போடு அணைத்துக் கொள்ளுகிறாள்.)

வள்ளி : நீ எங்கள் முத்துநகைதானே? (அச்சம்)

முத்துநகை : அச்சப்படாதே. சிறிய பொருளுக்குப் பின்னால் என் உடலை மறைத்துக் கொள்ளத் தெரியும் எனக்கு, அதன் பேர் விச்சுளி ஆட்டம், பேய் என ஒன்று உண்டா வீணான நடுக்கம்.

பொன்னி : இவ்வளவுதானு!

வள்ளி : எனக்குமட்டும் அப்போதே தெரியும்.

முள்ளி : எனக்குந்தான் தெரியும்

வள்ளி : தெரிந்துதான் நடுங்கினீர்களா என்ன?

(முத்துநகை, எதிரில் நோக்குகிருள். மூன்று குதிரைகள் ஆலமரத்தை நோக்கி வருகின்றன.)

முத்துந : நீங்கள் தொலேவில் ஓடி மறைந்து கொள்ளுங்கள்.

(தோழிமார் ஓடி விடுகிருர்கள். முத்துநகை, முன் போல் ஆலின் கிளேயில் ஏறி மறைகிருள் மணி முடியுடன்.)

## காட்சி—நான்கு

இடம் : ஆலின் அடி

நேரம் : முதிர் மாலே

கா. உறுப்பினர் : முத்துநகை, அரசன் முதலியவர்.

நிகழ்ச்சி : வியப்பும் திகைப்பும்

மன்னன் : (குதிரை விட்டு இறங்கி) அமைச்சரே, படைத் தலேவரே, இந்த ஆலமரத்தின் விழுது என் மணிமுடியைக் கீழே தள்ளியிருக்கும் என்று நினேக்கிறீர்கள்? அப்படியா, னுல் தேடுவோம் இங்குத் தானே விழுந்து கிடக்க வேண்டும்.

(அனேவரும் தேடுகிருர்கள்.)

அமைச்சர் : எங்கும் காணேமே.

(ஆலின் கிளே மேலும் கீழுமாக அசைகிறது; அரசன் முதலியோர், அசையும் அக் கிளேயை அண்ணுந்து பார்க்கிருர்கள்.)

ப. தலைவன் : கிளையின் அசைவுக்கும் காரணம் என்ன?

(கிளை முன்னிலும் மிகுதியாக அசைகிறது.)

அரசன் : என்ன!

(அரசன் முதலியோர் கிளையையும் அதில் உள்ள தழை இடுக்குகளையும் ஊன்றி நோக்குகிறார்கள்)

அரசன் : ஒன்றும் விளங்கவில்லை!

அமைச்சர் : என்ன வியப்பு!

ப.தலைவன் : காற்றல்ல காரணம்.

அமைச்சர் : தென்றல் மெல்லென அசைகிறது. கிளையோ மேலும் கீழுமாக ஆடுகிறது.

ப.தலைவன் : மந்தி குந்தி அசைப்பதுண்டு. இருந்தால் தெரியுமே! அணிற் பிள்ளையா அசைக்கும்? அதையும் காணோமே!

(கிளையின் அசைவு முன்னிலும் அதிகரிக்கிறது)

அரசன் : அமைச்சரே, படைத் தலைவரே, மக்களின் இயல்புக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகத் தோன்றவில்லையா?

படைத்தலை : மக்களின் இயல்புக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமை அது, இவ்வாறு செய்வது ஏன்? இதனால் யாருக்கு நன்மை? நமக்குப் புரியாத வகையில் பிறர் செய்யும் செயலே இது என்று நினைக்கிறேன். நீண்டு தாழ்ந்த இக் கிளையை வெட்டித் தள்ளிப் பார்ப்போம்.

(தன் வாளை உருவுகிறான்)

கிளை : கிளையை வெட்டாதே!

(அரசன் வியப்பும் திகைப்பும் அடைகிறான்)

அரசன் : நீ யார்?

கிளை : என்னைத் தெரிந்து கொள்ள விரும்பவேண்டாம்,

அரசன் : என் மணிமுடி காணப்படவில்லை அறிவாயா?

கிளி : அதோ புத்தூர் இருக்கிறதல்லவா? அங்கே வழிப் போக்கர் தங்கும் பொதுச் சாவடிக்கு இன்று நள்ளிருளில் தனியே வருக, மணிமுடி கிடைக்கும்.

அரசன் : யார் கொடுப்பார்?

(பதில் இல்லை)

அரசன் : யார் எடுத்தார்?

(பதில் இல்லை)

அரசன் : இங்கே தந்தால் என்ன?

(பதில் இல்லை)

அரசன் : இன்னும் ஒரு பேச்சுப் பேசு!

(பதில் இல்லை)

அரசன் : வல்லவன் மிழற்றும் யாழே! மாமரத்து குயிலே இன்னும் ஒரு பேச்சுப் பேசு!

அரசன் : இருவிழிக்கு எட்டாத இன்பத்தேன்கூடே, ஒரு துளி துளிப்பாய்.

(பதில் இல்லை, அண்ணாந்து கொஞ்சிய அரசனின் உள்ளம் எண்ணத்தில் ஆழ்கிறது.)

அரசன் : போகலாம்.

(அனைவரும் குதிரை ஏறிப் போகிறார்கள்)

அரசன் : இதோ வந்துவிடுகிறேன்.

(திரும்பி ஆலின் அடியில் வந்து கிளையை உற்றுப் பார்க்கிறான், போகிறான்.)

## காட்சி—ஐந்து

**இடம் :** செடி

**நேரம் :** செடி

**கா. உ. :** முத்துநகை, தோழிமார்.

**நிகழ்ச்சி :** கேலியும் மகிழ்ச்சியும்

(முத்துநகை பொத்தென்று குதிக்கிறாள். தோழிமார் கலகலவென்று நகைத்து ஓடி வருகிறார்கள்)

**முள்ளி :** வல்லவன் மிழற்றிய யாழே, மாமரத்துக் குயிலே! இன்னும் ஒரு பேச்சு பேசு! இருவிழிக்கு எட்டாத இன்பத் தேன்கூடே, ஒரு துளி துளிப்பாய்.

**பொன்னி :** ஏன் முத்துநகை இத்தனைக்கும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டாய்?

**முத்துநகை :** விரைவில் நிகழ்ச்சி முடிய வேண்டுமே.

**முள்ளி :** இல்லாவிட்டால்?

**முத்துநகை :** எவ்வளவு நேரம் என் உடல் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது?

**முள்ளி :** ஏன்?

**முத்துநகை :** எதிரிக்கு யான் இருப்பது தெரியாதிருக்க என் உடலை ஒடுக்கிக் கொண்டிருக்க வேண்டும், காணுவோர் மனப்போக்கை அறிந்து! அதுதான் நான் முன் சொன்ன விச்சுவியாட்டம். கழைக் கூத்தைச் சேர்ந்தது.

**முள்ளி :** எத்தனை மெல்லிய பொருளிலும் உன்னால் மறைந்து கொள்ள முடியும்?

**முத்துநகை :** என் முன் கையளவு தடிப்பும், என் அளவு உயரமும் உள்ள கோலில் நான் மறைந்து கொள்ள முடியும். மறைந்திருக்கும்போது அக் கோலின் நாற்புறமும் பிறர் பார்க்கவிடக் கூடாது. எதிர்ப்புறத்தார்க்கு மட்டுந்தான் தெரியாதபடி மறையமுடியும்.

பொன்னி : முத்துநகை, இன்று நள்ளிரவில் என்ன செய்யப் போகிறாய்?

மு. நகை : தோழியர்களே, இதையெல்லாம் யாரிடமும் சொல்லாதீர்கள். நம் பெற்றோருக்கும் தெரியாதிருக்க வேண்டும், என்ன?

முள்ளி : யாரிடமும் கூறவில்லை உறுதி.

மு. நகை : பொன்னி, வள்ளி, என்ன?

பொன்னி : உறுதி!

வள்ளி : உறுதி!

மு. நகை : உறுதியைக் காப்பாற்றுங்கள். எனக்கும் உங்களுக்கும் நலம் உண்டு. இன்றிரவு நாம் உணவுண்டு பெற்றோர்க்குத் தெரியாமல் இங்கு வந்து கூடிப் பேசுவோம் நேரமாகிறது.

(அனைவரும் போகிறார்கள்)

## காட்சி—ஆறு

இடம் : அரண்மனை, ஆய்வு மன்றம்

நேரம் : முன்னிரவு

க. உறு : அரசன் அமைச்சன் முதலியோர்

நிகழ்ச்சி : அச்சமும் உறுதியும்

அமைச்சன் : இன்னுமா அரசர் உணவு முடியவில்லை?

படை. த : அரசியார்க்குச் சேதி தெரிவிக்கிறாரோ என்னவோ!

உடற்காப் : யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என்று நமக்கு ஆணையிட்டார். அரசியார்க்கு அரசர் தெரிவிப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை.

(அரசன் புன்னகை தவழும் முகத்துடன் வருகின்றான். அனைவரும் வணக்கம் தெரிவிக்கிறார்கள்.)

அமைச்சன் : அரசர் முகம் அன்றலர்ந்த செந்தாமரை.

படை. த : இதழோரத்தில் நகைமுத்து.

உடற்காப் : அரசர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

அமைச்சன் : புத்தூர்ப் பொதுச்சாவடிக்குப் போவதில்லை என்று தானே?

அரசன் : போவதென்று.

அமைச் : ஆழந் தெரியவில்லையே!

அரசன் : தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

அமைச்சன் : ஊசலாடிய கிளி பேசலானது புதிது. அது அழைத்த இடத்திற்கு நாம் போவது சரியாகாதே. புதுமையின் மறைவில் இன்னதுதான் இருக்கும் என்பதை எப்படி அறிய முடியும்?

அரசன் : அறிய வேண்டும். சாகவா நேரும்? மகிழத்தக்க பரிசு!

உடற்காப் : தனியாகச் செல்ல வேண்டும் போலும்!

அரசன் : நீர் கேட்கவில்லையா கிளி சொன்னது?

உடற்காப் : ஆம். ஆயினும் நாம் விழிப்போடு நடந்துகொள்ள வேண்டாமா?

அரசன் : தூங்கிவிட்டேன். புத்தூர்ப் பொதுச் சாவடிக்கு நான் போகக்கூடாது என்ற உங்கள் மறுப்புப் பயனற்ற தாகும்.

(அதே நேரத்தில் வாயிற்காப்போன் அரசனிடம் ஒரு சீட்டு கொண்டு வந்து கொடுத்துப் பணி கிறான். அரசன் படிக்கிறான் தனக்குள்.)

அரசன் : வரவிடு புலவரை.

(வாயில் காப்போன் போகிறான்)

அரசன் : (அமைச்சரை நோக்கி) கேளுங்கள்.

"இல்லாள் எனக்கழ, நான் அவள் கேட்க
எழுந்த பசிப்
பொல்லாக்கை நீக்கென வந்தேன் புதிய னூர்ப்
பொன்னன், இந்நாள்
செல்லா மணிமுடி சென்றதென் றேங்காது
தேன் மலர்த்தார்
வல்லாய் சடையப்ப நாதா எனைப்பார்
வரவழைத்தே"

மணிமுடி சென்று விடவில்லையாம். சென்றுவிட்டது என்று நான் ஏக்கமடைய வேண்டாமாம்.

(புலவர் வருகிறார்; அவரின் உடலில் மறைந்தபடி ஓர் இளைத்த உருவம் பின் தொடர்கிறது. அவ்வுருவம் தன் கையில் ஓர் உலக்கை வைத்திருக்கிறது.)

அரசன்: அதோ புலவரும் வந்துவிட்டார்.

(புலவர் அரசனை நெருங்குகையில் புலவர்பின் மறைந்தபடி வந்த உருவம் அங்கிருந்த தூணில் மறைந்து கொள்ளுகிறது.)

புலவர்: வேந்தர் வேந்தே வாழ்க!

அரசன்: அமருங்கள், மறைந்தது என் மணிமுடி. தேடிச் சென்றோம். அங்கோ ஆலின் கிளை ஆடியது. அதன்பின் அக் கிளை பேசியது. மணி முடிகேட்டேன். புத்தூர்ப் பொதுச் சாவடிக்கு இன்று நள்ளிரவில் கிடைக்கும் வா என்றது. நீங்கள், செல்லா மணிமுடி சென்றதென்று ஏங்க வேண்டாம் என்றீர்கள். அதுபற்றி இன்னும் தெரிந்தால் சொல்லுங்கள்.

அமைச்சன்: தனியாக அரசர் புத்தூர்ப் பொதுச்சாவடி செல்வது நன்றா?

புலவர்: உண்டபின் உரைப்பேன்.

அரசன்: சோறு வட்டிக்கச் சொல்வீர் உடற்காப்பாளரே.

புலவர் : கலத்தில் அல்ல

அரசன் : இளவாழை இலையில்?

புலவர் : பறவை மிதித்தது

அரசன் : வாயில் ஊட்டச் செய்கிறேன்.

புலவர் : வாட்டப் படாது!

அரசன் : கையில் உருட்டிப் போட்டால் வாங்கியுண்பீர்கள்.

புலவர் : மானக்கேடு. தனக்கென வாழாப் பிறர்க் குரியோயே, என் அன்னை முதுகின் மேல் படைப்பீராயின் அது கேழ்வரகின் கூழாயினும் அமுது எனக்கு!

அமைச் : அரண்மனையில் உணவுண்டு முடிந்து விட்டது. அன்னை அரசியார் தூங்குகின்ற நேரம், இனிச் சமைக்க வேண்டும். அன்னை அரசியாரின் முதுகின்மேல் படைக்க வேண்டும்! என்ன புலவரே?

அரசன் : புலவரே, அவர்மேல் வருத்தம் வைக்க வேண்டாம்; ஈயும் ஆமையும் என் அமைச்சரின் உடற்பிறப்பு.

புலவர் : ஈயும் ஆமையும்! ஈயாமையா, ஓகோ! ஈயாமையும் கெடுதியில்லை! தடுக்காமை இருந்தால்.

அரசன் : உணவை நேர் செய்கிறேன்.

(அரசன் போகிறுன், அரசி வருகிறுள்)

(அரசன் வருகிறுன், பணிப்பெண்கள் வருகிறுர்கள்)

(அரசி கவிழ்ந்து படுக்க, அவள் முதுகில் பணிப் பெண்களும் அரசனும் சோறு கறிகள் படைக் கிறுர்கள். புலவர் உணவருந்துகிறுர்.)

ப. தலைவன் : தமிழ்ப் புலவரின் தறுக்குத் தலைதுள்ளிப் போகிறது.

அமைச்சன் : அரசர் கொண்ட அளவை மிஞ்சிவிட்டது.

**ப. தலைவன் :** ஈதலால் நெஞ்சம் இன்பம் அடைகிறது. அந்த இன்பத்தை இடைவிடாது நுகர்ந்து கொண்டிருப்பதோர் மனப்பான்மை ஈவோரைத் தன் வழியே இழுத்துச் சென்று விடுகிறது! நிலை தவறி விடுகிறார்கள் கள்ளுண்டவர் போல. ஐயோ அரசியார் திருமுதுகை அப் புலவனின் எச்சில் கலமாக்கவும் அரசர் ஒப்பினாரே!

**அமைச்சன் :** அவ்வாறு கேட்கத் துணிந்தானே அப் புலவன். என்ன கொடுமை! என்ன கொடுமை! தமிழ்க்கும் புகழ் தேடுகின்றானா? இல்லை இகழன்றோ தேடுகின்றான்!

*(புலவர் உணவுடன் அரசர் கைகழுவத் தண்ணீர் தருகிறார்.)*

*(புலவர் அரசர், அரசி மூவரும் வந்து உட்காருகிறார்கள்.)*

**அரசன் :** புலவரே, நான் இன்னும் சிறிது நேரத்தில் அந்தப் புத்தூர்ப் பொதுச்சாவடிக்குச் செல்லலா மல்லவோ?

**புலவர் :** அந்த ஆலின் கிளையின் ஆணைப்படியா?

**அரசன் :** ஆம் அந்த இனிய குரலின் ஏற்பாட்டின்படி!

**புலவர் :** (இனிய குரலில் பாடுகிறார்)

தீயொன் றழைத்திடில் பஞ்சான
நற்பொதி செல்வதுண்டோ?
நோயொன்ற ழைத்திடில் கற்றார்
திரும்பியும் நோக்குவரோ
வாயொன்று தாமரை அன்பொன்று
நெஞ்ச மனையிருக்கப்
பேயொன் றழைத்திடில் போவதுண்
டோ புழற் பேரரசே?

*(இப் பாட்டின் நான்காம் அடியை அரசி கேட்கக் கூடாது என்ற எண்ணத்தோடு அரசன் அரசியை உள்ளே அழைத்துச் சென்று விடு*

கிறுன். அமைச்சனும் உடன் செல்லுகிறுன். சிறிது நேரத்தில் அமைச்சன் பொற்காசு நிறைந்த தட்டொன்று தூக்கியபடி புலவர் முன் வந்து அவரிடம் கொடுக்கிறுன். புலவர் பெற்றுக் கொள்ளுகிறுர்.)

**அமைச்சன் :** புலவரே, விரைவிற் போய்வாரும்.

**புலவர் :** நன்று!

(புலவர் தட்டுடன் கிளம்புகிறுர். தூணண்டை வரும்போது, மறைந்திருந்த உருவம் தன் உலக்கையால் புலவரின் முதுகில் அடித்து வீழ்த்துகிறது.)

**புலவர் :** ஐயோ!

(தரையில் வீழ்ந்து கதறுகிறுர்.)

(உருவம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வெளிச்சென்று விடுகிறது.)

(அமைச்சன், படைத்தலைவன், உடற் காப்பாளன் ஆகியோர் ஒன்றும் அறியாது, துன்பமும் வியப்பும் அடைந்த புலவர் அருகில் வந்து நிற்கிறுர்கள். அரசன் அரசி இருவரும் அங்கு ஓடி வருகிறுர்கள்.)

**அரசன் :** என்ன நடந்தது?

**புலவர் :** அரசே நீர் என்னை அறிந்து கொள்ளாவிடினும், உம் அமைச்சர் முதலியவர்கள் என்னை இன்னுன் என்று அறிந்து கொண்டார்கள். ஆதலால்தான் அவர்கள் என்னை இத் துன்பத்துக் குள்ளாக்கினுர்கள். நான் பட்டது போதும். இனியும் என்னை அவர்கள் இன்னற்படுத்தா திருக்கும்படி ஏற்பாடு செய்க. நான் உம் பகைவனுகிய நடு நாட்டானுல் அனுப்பப் பட்டவன். பல நாள்களாகவே இங்குத் தங்கி உளவறிந்து வருகின்

றேன். இன்று உம் அரண்மனையின் உட்புறத்துள்ள பொருட்காப்பறையின் அமைப்பை அறிய வந்தேன். நீர் மணிமுடி இழந்ததையும் சாக்காக வைத்துப் பாட்டொன்று பாடிக் கொடுத்தேன்.

என்னைப் பொறுத்தருள வேண்டுகிறேன். அரசியார் கற்பும், உமது கொடைத் திறமும், உம்மைக் காக்கும். நடு நாட்டானின் நயவஞ்சகமும் பொறாமையும் அவனை அழிக்கும்.

அரசன் : அமைச்சரே என்ன கூறுகிறீர்?

அமைச் : காவலில் வைக்க வேண்டும். காலையில் ஆய்ந்தோய்ந்து ஆவன செய்வோம்.

அரசன் : அவ்வாறே செய்க.

## காட்சி—ஏழு

இடம் : அரண்மனை, வாயில்

நேரம் : இரவு.

க. உறு வாயில் காப்போர் குப்பன், முத்தன்.

நிகழ்ச்சி : அச்சமும் சிரிப்பும்.

(கவிழ்ந்து படுத்துக் கொண்ட குப்பனும் முத்தனும் சிறிது தலை தூக்குகிறார்கள்.)

குப்பன் : போய் விட்டதா?...வருமாடா?

முத்தன் : அரண்மனை உலக்கையா அது அல்லது வெளி உலக்கையா?

குப்பன் : போய் விட்டதா?

முத்தன் : அது போய் விட்டது தடதடவென்று, கண்ணுக் கெட்டிய வரைக்கும் நான் பார்த்தேன்.

குப்பன்: நீயா பார்த்தாய்; மெய்யாகத்தான் இருக்கும். நீயும் நானும் நெருங்கி நின்று பேசிக் கொண்டிருந்தோம். உலக்கை உள்ளே இருந்து வந்தது. என்னடா உலக்கை நடக்கிறதே என்று நினைக்கும் போதே வயிற்றில் சொரக் என்றது. விழுந்தோம் கவிழ்ந்து! பார்த்தனும் இவன்!

முத்தன்: எடுத்த எடுப்பில் என் பெண்டாட்டி வருகிறுள் நேற்று வந்தது போல் என்று நினைத்தேனடா! பூபூபூ.......

(உடல் குலுங்கச் சிரிக்கிறுன்)

பிறகு பார்த்தால் மழ மழ வென்று வருகிறது உலக்கை. கிக் கிக் கிக் ............

(மல்லாக்க நிமிர்ந்து சிரிக்கிறுன்)

குப்பன்: யாரோ மல்லாந்து படுத்துக் கொண்ட மார்பின் மேல் உலக்கையை நிமிர்த்துப் பிடித்தபடி தரையோடு நகர்ந்து போகிறது போல் இருக்கிறதென்று தரையை நட்டுச் பார்க்கிறேன். அப்பொழுதுதான் அடிவயிற்றில் குபீல் என்றது! குக் குக் குக்...........

முத்தன்: நான் திரும்பிப் பார்த்த நொடியில் ஓட்டை வருகிறது என்று நினைத்தேன், ஐயையோ ஐயையோ ஐயையோ ...........

(வயிறு வலிக்கச் சிரிக்கிறுன்! முத்தனே தரையில் உட்கார்ந்தபடி தலைவலிக்கச் சிரிக்கிறுன். இவர்களின் பின்புறமாகப் படைத்தலைவன் வந்து நிற்கிறுன்)

குப்பன்: அந்த உலக்கையை வழிமறிக்கலாம் என்று நினைத்தேன் அது போகிற விசையில் மூஞ்சியை, முகவாய்க் கட்டையை உடைத்துவிட்டால் என்ன செய்கிறது.

ப. த: ஆரடா இந்த வழியாகப் போனவன்?

(இருவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பதில் சொல்லத் தொடங்குகிறுர்கள்.)

முத்தன்: உலக்கை ஒன்று போனது தலைவரே!

ப. த: அவனை இன்னனென்று தெரிந்து கொள்ளவில்லையா நீங்கள்? (அருகில் நிற்கும் குப்பனுக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. அவன் வாயைப் பொத்திக் கொண்டிருந்தும் பயனற்றதாகி விடுகிறது. புர் என்று சிரிப்பு வெளி வந்துவிடுகிறது. )

குப்பன்: ஏதோ ஓர் உலக்கை.

ப. த: நீ மட்டும் மிக்க அறிவாளியோ! உலக்கையாம்! அவன் இன்னனென்று சரியாய்த் தெரிய வேண்டுமே.
(முத்தனல் சிரிப்பு அடக்க முடியவில்லை. புதை வாணச் சிரிப்பு ஓசையுடன் கிளம்புகிறது.)

முத்தன்: உலக்கை தான் வேறொன்றுமில்லை.

ப. த: உலக்கையா யிருக்கட்டும் அறிவாளியாயிருக்கட்டும் அவன் எந்தப் புறமிருந்து எந்தப் புறம் போனன்? கேட்கிறேன். அச்சமில்லாமல் சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே!

முத்தன்: (சிரித்துக் கொண்டும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டும், 'ஏன் குப்பா நீதான் சொல்' இதற்குப் பதில் ஒக்காளச் சிரிப்பு)

குப்பன்: உலக்கை தான் ஐயா. அரண்மனையின் உட்புற மிருந்து வெளியே போனது.

ப. த: கையில் என்ன வைத்திருந்தான்?

குப்பன்: (பதில் சொல்ல முடியவில்லை அவனல்; அழுகிறன் சிரித்துக் கொண்டே. இதற்கிடையில் அமைச்சன் அங்கு வருகிறன்)

அமைச்: அது கிடக்கட்டும் ஆண? பெண்ண?

(முத்தன் சிரிப்பது தெரியாமல் இருப்பதற்காக வாயைத் திறந்து கொள்கிறன். அப்போதும் சிரிப்பு வருகிறது. ஆ என்ற மாற்றோசையுடன் )

குப்பன் : (இருமல் போட்டுச் சிரிப்பை மறைக்க முயலுகிறன் அது ஓங்காரச் சிரிப்பாகிறது) உலக்கை ஐயா!

அமைச் : உலக்கை என்றல்? (எரிச்சலுடன்) அதெல்லாம் இருக்கட்டும் ஆணு? பெண்ணு?

குப்பன் : ஏதுங் கெட்ட உலக்கை ஐயா.

(முகத்தை திரும்பிக் கொண்டு சிரிக்கிறன்)

முத்தன் : நம் வீட்டில் உலக்கை இல்லையா?

அமைச் : உலக்கை இருந்தால்?

முத் : (ஒருபுறம் மறைவாக ஓடி நின்று வெடிச் சிரிப்புச் சிரிக்கிறன்! அங்கிருந்து அமைச்சனின் எதிரில் வந்து நின்று) வாந்தி எடுத்தேன். (மீண்டும் சிரிப்பு)

அமைச் : அடக்கம் இல்லாதவர்கள் இவர்கள்!

(படைத்தலைவன், இருவரையும் அடிக்கிறன். இருவரும் ஓவென்று அழுகிறர்கள் அதே நேரத்தில் அரசன் அங்கு வந்து விடுகிறன்.)

அரசன் : புலவரை அடித்தவன் யார், என்பதை இன்னும் கண்டு பிடிக்க வில்லையா?

அமைச் : கண்டு பிடித்து விட்டோம், அரண்மனை ஆள் அல்லன்.

முத் : உலக்கை ஐயா! (அழுது கொண்டே)

(குப்பன் அழுகுரல், வெடிச் சிரிப்பாகிறது)

அரசன் : இதென்ன! உலக்கையா போகும்?

குப்ப : அமைச்சர் ஐயா! நீங்கள் அங்கிருந்து இப்படி வாருங்கள் சும்மா.

(அமைச்சன் அரண்மனையின் உள்ளிருந்து வெளியிற் போகிறன்.)

குப்ப : இவர் தான் உலக்கை

(அரசனுக்கு சிரிப்புக் குலுங்குகிறது)

முத் : (படைத்தலைவனைக் காட்டி) இவரை உலக்கை என்று வையுங்கள்! அங்கிருந்து இந்த வழியாகப் போயிற்று.

அரசன் : மனிதனே போக வில்லையா? நான் கேட்பது எப்படி?

முத் : உலக்கை! மனிதனல்ல, பெண்ணல்ல. விலங்கல்ல பறவையல்ல, உலக்கை!

அரசன் : என்ன வியப்பு! உண்மை விளங்கிற்று! ஆலின் கிளையாகக் காட்சி தந்த அந்த இளமங்கை இன்று உலக்கையாக வந்து இத் திருவிளையாடல் இயற்றினாள். மக்களின் வன்மைக்கு அப்பாற்பட்டதான பெருவன்மையுடையவள் அமைச்சரே, என்னைப் பின் தொடர வேண்டாம். படைத் தலைவரே, என்னோடு வராதீர். அவள் கூறியபடி தன்னந் தனியே செல்லுவேன்.

அங்கு அணுக வேண்டாம் என்கிறாள் அரசி. அமைச்சர் படைத் தலைவர் எண்ணமும் அப்படியே. இதற்கு என் மேல் நீங்களும், அவளும் கொண்ட அன்பே, காரணம். தடையை மீறுகின்றேன் என் கடமை அது.

அமைச் : அரசே, தனியே செல்வதை மறுக்கிறேன்.

ப.த என் எண்ணமும் அதுதான்.

அரசன் , விடை கொடுங்கள்.

ப. த. அமை : விடைதர மறுக்கிறோம்.

அரசன் : என் விருப்பத்தின்படி.

(அரசன் சென்று குதிரையேறி, அதை முடுக்குகிறான். அரசன் சென்ற பின் அமைச்சனும் படைத்தலைவனும் பேசிக் கொள்ளுகிறார்கள்.)

அமைச் : அரசியாரிடம் இதை விரைவிற் சென்று சொல்லுவோம்.

(விரைந்து அரண்மனையின் உட்புறம் செல்லுகிறார்கள்.)

## காட்சி—எட்டு

இடம்: ஊர் பொதுச் சாவடி.

நேரம்: நள்ளிரவு.

கா. உ: முத்துநகை, முள்ளி, வள்ளி, பொன்னி, அரசர்.

நிகழ்ச்சி: முன்னேற்பாடு.

(பொதுச் சாவடியினுள், மூன்றடிக்கோர் உலக்கை விழுக்காடு; வரிசைக்கு இருபத்தைந்தாகப் பத்து வரிசை நட்டிருக்கிறார்கள். ஆளைவிடச் சிறிது உயரமான அவ்வுலக்கை ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு விளக்கு எரிகிறது.)

முத்துநகை: அரசர் வரும் நேரம். என்காலில் இந்தச் சிலம்பை மாட்டுங்கள்.

(தோழிமார் முத்துநகையின் காலில் சிலம்பை அணிவிக்கிறார்கள்.)

வள்ளி: முத்து நகை, உன்னை அரசர் கண்டால் என்ன ஆகும் நீ தேன் குடம்! அவர் ஈ.

முள்ளி: தேன் குடம் வாய் திறந்தால்தானே!

பொன்னி: அரசர் விரும்பினால் முத்துநகை ஒப்ப என்ன தடை?

முத்து. ந: அதெல்லாம் இருக்கட்டும், நான் சொன்னவை நினைவிருக்கட்டும். அவர்கள் வரும் வழிநோக்கிச் செல்லுங்கள் விரைவாக.

வள்ளி: எம்மால் செய்ய முடியாததைச் செய்யும்படி சொல்லுகிறாய்.

முத்து. ந: மலைக்க வேண்டாம். அமைச்சரும், மற்றவரும் உம்மைவிட நுண்ணறிவுடையவர்கள் என்று நினையாதீர் செல்லுங்கள்.

(தோழிமார் செல்லுகிறார்கள். முத்துநகை உலக்கை களின் இடையில் மறைகிறாள். சிறிது நேரத்தில் அரசன் வந்து ஊர்ப் பொதுச் சாவடியினுள் நுழைகிறான். உலக்கைகளின் நடுவிலிருந்து, ஆடும் காலடிச் சிலம்பொலி கேட்கிறது. அந்தத் தாளத்துக்கு ஒத்தபடி இனிய பாடல் கேட் கிறது.)

## பாட்டு

உள்ளம் கவர்ந்திடும் ஒளிப்பகல் இருக்கையில்
உனை விரும்புவாரோ இருளே? (உள்)

வள்ளல் சடையநாதர் மணமலர்த் தாரிருக்க
வஞ்சிக் கொடியே, நீயேன், சொல்வாய்? (உள்)

கொள்ளைக் கதிர்மணிக் கூடம் இருக்கையில்
கூரையே ஏதுக்கு நீதான்?
வெள்ளித்தேர் ஏறும் வேந்தர் விரும்பிடார்
எருமையே வீணவல் கொண்டாய்.
உலக்கைகளே உங்கள் இடம் நலம் செய்யுமா? (உள்)

(பாடல் கேட்கிறது. ஆடலின் காற்சிலம்பு இசைக் கேட்கிறது. உலக்கைகளின் இடையில் புகுந்து புகுந்து வரும் அரசன் அங்கு எவரையும் காணாது வியப்படைகிறான். மீண்டும் காதலை மறைபொருளாகக் கொண்ட பாடல் தொடங்கு கிறது. பாடற் கருத்தில் சொக்கி நிற்கிறான்.)

## காட்சி—ஒன்பது

இடம்: பொதுச் சாவடிக்கு வரும் வழி.

நேரம்: நள்ளிரவு

கா. உ.: தோழி, வள்ளி, அரசி.

நிகழ்ச்சி: ஏமாற்றம்.

(வள்ளி எதிரில் உற்றுநோக்கியபடி ஓர் மரத்தடியில் நிற்கிருள். முக்காடிட்டபடி அரசி வருகிருள். வள்ளி எதிரே செல்லுகிருள்!

வள்ளி: யார் நீங்கள்? ஓர் ஆடவன் ஒரு பெண்ணுடன் போகக் கண்டீர்களா?

அரசி: எந்த ஆடவன்! பெண் யார்?

வள்ளி: பெரிய இடத்துச் சேதி. போகக் கண்டீர்களா?

அரசி: நங்கையே நானும் பெரிய இடத்தவள்தான் (முக் காட்டை விலக்கி,) நான் அரசி.

வள்ளி: வணக்கம் அன்னையே அரசர் வந்தார்; இந்த நள் ளிருளில் ஊர்ப் பொதுச் சாவடியில் காத்திருந்த ஒருத்தி அரசரை ஆவலுடன் வரவேற்ருள். காதல் மொழிகள் மாற்றிக் கொண்டார்கள் இருவரும். அரசர் அவளை அரண்மனைக்கு அழைத்தார். அங்கு அரசி கண்டால் என்னைப் பழிப்பாள்; நான்தாளேனே என்ருள் அவள். அரண்மனையை அடுத்த சோலை விடுதிக்கு வா என்று அரசர் அவளைக் கைப்புறத்தில் அணைத்தபடி இழுத்துச் சென்ருர்.

அரசி: என் மணவாளரா? நீ ஏன் அவர்களைத் தேடுகிருய்?

வள்ளி: நானு?......அவள் என்னையும் துணைக்கு அழைத்தாள். இதோ என் மணவாளரிடம் இக் குழந்தையைக் கொடுத்து விட்டு வருகிறேன் என்று கூறிக் குழந்தையை என்

மணவாளரிடம் கொடுத்துவிட்டு வந்து பார்க்கையில் அவர்களைக் காணேன்.

அரசி: நீ யார்?

வள்ளி: நான் நீத்தான்பாளையத்தாள். நகருக்கு வந்தோம் நானும் மணவாளரும். இரவு பொதுச்சாவடியில் தங்கினேம்! குழந்தையமும் நான் போகிறேன்!

அரசி: நன்றி! நன்றி! நன்றி! போ! நானும் விரைவாகப் போகிறேன். உனக்கு என்ன வேண்டும்? இந்தா இந்த முத்துமாலை.

(முத்து மாலையைக் கழற்றித்தர வள்ளி பெற்றுக் கொள்ளுகிருள். அரசி விரைவாகத் தன் அரண்மனை சார்ந்த சோலையை நோக்கி ஓடுகிருள்.)

## காட்சி—பத்து

இடம்: அரண்மனைக்கும் பொதுச் சாவடிக்கும் இடையில் ஓர் அறவிடுதி.

நேரம்: ஷை

கா. உ: தோழி முள்ளி, படைத்தலைவன்.

நிகழ்ச்சி: ஏமாற்று.

(குதிரைமேல் படைத்தலைவன் வருகிருன். எதிரில் முள்ளி ஓடுகிருள்.)

முள்ளி: ஐயா! ஐயா! நீங்கள் யார்? படைத்தலைவர் வாழும் இடம் எங்கே இருக்கின்றது?

ப. த: ஏன் உனக்குப் பெருமூச்சு? என்ன நேர்ந்தது?

முள்ளி: அரசர் வந்தார். அவரை நான்கு பேர் பிடித்துக் கட்டினர்கள்......

ப. த: ஆ!

முள்ளி: குதிரைமேல் போட்டுக்கொண்டு போனார்கள். அரசர் கூவினார் "கரடிப் பட்டிக் கள்ளர்கள்" என்று. அதற்குள் அரசர் வாய் அடைக்கப்பட்டது. இப்படித்தான், இப்படித் தான் போனார்கள்! இப்படித்தான் போனார்கள்!

(படைத் தலைவன் குதிரையை முடுக்குகிறான். வந்த வழியே குதிரை பறக்கிறது.)

## காட்சி—பதினொன்று

இடம்: அரண்மனைக்கும் பொதுச் சாவடிக்கும் இடையில் ஓர் பாழ் இல்லம்.

நேரம்: ஷெ.

கா. உ: பொன்னி, அமைச்சன்; நிகழ்ச்சி—காதல்.

(பாழில்லத்தில் தோழி பொன்னி, நல்லுடை நல் லணியுடன் எதிர் நோக்கியிருக்க, அமைச்சன் குதிரை மேல் வருகின்றான். பொன்னி அவன் எதிரில் பாடிக்கொண்டே ஆடுகிறாள்.)

### பாட்டு

சிவனடி மறவாத செம்மல்—எங்கே?
செந்தமிழ் நாட்டினன் எங்கே? எங்கே (சிவ)

அவன் வாழும் மணவீ டெங்கே? எங்கே
அழகியோன் வாழ்விடம் எங்கே? எங்கே (சிவ)

துவளா என்னிடை துவள லானேன்
துன்புறா என்னுளம் துன்புறல் ஏனோ!
பவளவா யிதழை அவன் சுவைப்பானோ!
பாவைஎன் காதலை அவன் வெறுப்பானோ? (சிவ)

(குதிரையை நிறுத்தி, இறங்கி நின்று அவளின் ஆடல் பாடல்களில் சொக்கி நின்ற அமைச்சன், பேசத்

தலைப்படுகிறான். அவனின் அச்சம், நாவை அடக்குகிறது.)

அமைச்: பெண்ணே!......நீ......யார்?

(மீண்டும் பாடி ஆடுகிறாள்.)

## பாட்டு அடி 2

பொன்னி:

உணர்வே, இவன் யார்? ஓ ஓ அமைச்சனோ?
உமையவள் சொன்ன நன் மகன் தானோ?
அணையா விடில்என் ஆவி என் னாகும்?
அருள் புரிவான் எனில் என் துயர் போகும். (சிவ)

அமைச்: நான் அமைச்சன்!

(பொன்னி, அவனை உற்று நோக்குகிறாள். மலைப் புற்று நின்று மண்ணில் சாய்கிறாள். அமைச்சன் அவளைத் தன் தொடையில் வைத்து அவள் முகத்தை நட்டுப் பார்க்கிறான். கண்மூடி இருந்த அவள் கண் திறந்து பார்த்துப் புன் சிரிப்புக் கொள்ளுகிறாள்.)

பொன்னி: நம் இருவர் தவத்தின் பயன் இந்த 'ஒட்டுறவு! மலை மகள் அருளின் பயன் நம் திருமணம், நான் இந்நேரம் ஆடினேனு! நான் இந்நேரமட்டும் பாடினேனு?

அமைச்: ஆம்?...அது உனக்கே தெரியாதா? ஆடிப் பாடும் போது உன் நிலை எப்படி?

பொன்னி: ஆடிப் பாடியவள் வானாட்டு மகள், உன் மடியில் கிடப்பவள்—இப்போது—இந் நாட்டு மங்கை. ஆடிப் பாடியவள் மலைகளின் தோழி. உன் மடியில் கிடக்கும் இப்போது உன் அன்பு மனைவி.

அமைச்: என்ன புதுமை! நான் காண்பது கனவல்லவே! நான் யார்? வானாட்டுப் பெண்ணை என்னை அறிவாயா?

பொன்னி : அமைச்சனே, உன்னையே நீ ஐயப்படுகிறாயா? வள்ளல் சடையநாதனில் அமைச்சன் தான் நீ?

மைச் : அதில் ஒன்றும் மாற்றமில்லையே? நன்று உன் பழைய வரலாறு என்ன? என்னிடம் கூறுவாயா?

பொன்னி : சிவனார் மனைவி மலைமகள் தெரியுமா? அவள் தோழி இந்திரை தெரியுமா? ஒரு நாள் சிவனாரும் மலைமகளும் எங்கள் நாட்டுக் கள்ளைக் குடித்துக், களித்து ஆடிக் காதலில் இருவரும் கட்டிப் புரண்டார்கள். வழக்கப்படி நான் பூக்கொய்து கொண்டு போனேன். அந்போது நான் அங்குச் சென்ற பிழைக்காக என்னை வெறுத்தார்கள்:

மலைமகள் கூறினாள்: நீ மண்ணுலகில் ஒரு தாழ்ந்த குடியில் பிறந்திடுவாய். சடையநாத வள்ளலின் அமைச்சனை மணவாளனாகப் பெற்று, அவனையே அந் நாட்டுக்கு அமைச்சனாக்கி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து, பின் இங்கு மீண்டும் வா, என்றாளா? பிறந்தேன், வளர்ந்தேன், வந்தேன், உன்னை அடைந்தேன்.

அமைச்: என் கண்ணே! கட்டிக் கரும்பே. நான் இந்த நாட்டுக்கு அரசனாவேனா? எப்போது?

பொன்னி! இதோ பார். அவள் தந்த புதுமைச் கோல்! இதனால் எதையும் வெல்வேன். அரியவை அனைத்தும் செய்வேன். மேலும் அவ்வப்போது நான் இன்னது செய்ய வேண்டும் என்று மலைமகள் என் உணர்வில் தோன்றிச் சொல்லிக் கொடுப்பாளே! தெரியுமா உனக்கு?

அமைச்: எனக்கென்ன தெரியும்! எல்லாம் தெரியும் உனக்கு! எல்லாம் முடியும் உனக்கு! என்றைக்கு, எப்படி, நான் அரசனாவேன்?

பொன்னி: கேட்டுச் சொல்லுகிறேன். மலைமகளே!......அவ்வாறே தாயே...ஆகட்டும் அன்னையே அமைச்சசு என்னை இப்போது மணந்தற்கு அடையாளம் கொடு.

அமைச்: இதோ என் கணையாழி.

(கணையாழியைப் பெற்றுக் கொள்ளுகிருள்)

பொன்னி: பாழில்லம்!—கேடில்லை. இங்கே நாம் இன்பத்தை நுகர்ந்திருப்போம். பிறகு மற்றவைகளைக் கூறுகிறேன்.

அமைச்: நான் பெற்ற பேறு யார் பெறுவார்? யார் பெற்ருர்?

(இருவரும் கைகோத்தபடி பாழில்லத்தில் நுழைகிருர்கள்.)

## காட்சி—பன்னிரண்டு

இடம்: ஊரிப் பொதுச் சாவடி.

நேரம்: விடியுமுன்.

கா. உறுப்பினர்: அரசன், முத்து நகை.

நிகழ்ச்சி: எதிர்பாராத எதிர்ப்பு

(அரசன், உலக்கைகளின் இடையிடையே புகுந்து புகுந்து தேடுகிருன். முந்துநகை தென்படவில்லை. காலோய்ந்து மலைத்து நிற்கிருன்.)

அரசன்: (இரக்கமும், காதலும் நிறைந்த குரலில்)
எனக்கேன் இந்த தேர்தல்? பெண்ணே நான் தோற்றேன், உன் இன்ப முகம் காட்டு.

முத்துநகை: அரசே நீர் தோற்று விடவில்லை. இரங்குதல் வேண்டாம். முதலில் நான் கேட்கும் சில கேள்விகட்கு விடை கூறுங்கள் "கடலின் நீர்த்துளிகளில் உயர்வு தாழ்வு உண்டா?"

அரசன்: கடலின் பெருந்தோற்றம். அதன் பிளவற்ற நிலை இவற்றிற்கு, உயர்வு தாழ்வற்ற நீர்த் துளிகள் காரணம், அன்னமே, நீர்த்துளிகள் தம்மில் நிகர்.

முத்துநகை: விளக்கத்தோடு கூடிய விடை; மிக்க மகிழ்ச்சி வேந்தரே! பெருந் தோற்றமுள்ள மக்கள் கூட்டம் பிளவற்ற நிலையை அடையவேண்டும். மக்களின் உயர்வு தாழ்வு நீங்க வேண்டுமல்லவா?

அரசன்: மக்கள் நிலை வேறு. முற்பிறப்பில் செய்த வினைக் கீடாக இப் பிறப்பில் மக்கள் தம்மில் உயர்வு தாழ்வு அடைகிறார்கள். அரசென ஒரு சாதி, அந்தணர் என ஒரு சாதி, வாணிகர் என ஒரு சாதி. சூத்திரர் என ஒரு சாதி. இவை தம்மில் ஏற்றத் தாழ்வு உடையவைகளல்லவா?

முத்துநகை: (குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறாள்) அப்படியா?...

அரசன்: கலைஞன் தெறித்த யாழின் நரம்பொலி! பூங்காவனக் குயிலின் குரலிசை! ஐயோ பெண்ணே சிரிப்பொலி கேட்கிறது! தேனலை கொழிக்கும் செவ்வுதட்டைக் காண முடியவில்லையே. எதிரில் உன் பொன் மேனி காட்ட மாட்டாயா?

முத்துந: நேரம் வரும். நானும் அதைத்தான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அரசன்: மக்களால் உயர்வு தாழ்வு உண்டு என்பது கேலிக் குரிய தென்கிறாயா?

முத்துந: கேலி செய்யவில்லை. வியப்பை உண்டாக்குகிறது உங்கள் சொற்கள். ஒருவன் உயர்ந்தவனாகவே பிறக் கிறான் என்பது உங்களின் இப்போதைய நம்பிக்கை போலிருக்கிறது. அப்படித்தானே?

அரசன்: இப்போதைய நம்பிக்கை! முன்னும் அந்த நம்பிக்கை உண்டு. நம்பிக்கை என்ன?

உண்மை அதுதானே! நான் சொல்லுவதா இது! சாத்திரம்!

முத்துந: சாத்திரம்! அந்தச் சாத்திரம் தமிழர் நலத்துக்காகத் தமிழறிஞர் செய்ததா? தமிழர்க்கு நலமுண்டா அதனுல்?

அரசன்: ஆரியரால் செய்யப்பட்டது; உண்மை கூறுகிறது; நலம் செய்கிறது.

முத்துந: யாருக்கு? உமக்கு நலம். மற்றும், சாதி உயர்வு கூறிப் பொது மக்களைச் சுரண்டும் ஒரு கூட்டத்துக்கு. நாம் பெரும்பான்மை ஏழை மக்கட்கு நலமுண்டா அதனுல்? முன் பிறப்பில் நல்வினை செய்ததால் நீங்கள் இப்பிறப்பில் அரசரானீர். முன் பிறப்பில் தீவினை செய்ததால் ஆட் பட்டுக் கிடக்கிருர்கள் குடிமக்கள். ஆதலால் குடிமக்கள் அரசனுக எண்ணுவதோ புரட்சி செய்ய முயலுவதோ பயனற்றவை. அவர்கள் ஆரியரை வழிபட்டும் அரசர்க்கு அடிமைப்பட்டும் நாள் கழிக்க வேண்டும். இது ஆரியர் சாஸ்திரம். இதனுல் உமக்கு நலம் ஆரியர்க்கு நலம். கிளர வேண்டாம் நெஞ்சக் கனலை, இதைக் கேளுங்கள். தாழ்ந்த தள்ளப்பட்ட ஒருத்தியும் உயர்ந்த சாதி எனும் ஒருவனும் சாதி என்று உளம் ஒத்துப் போனுல், மணந்து வாழச் சட்டம் இருக்கிறதா?

அரசன் : இல்லை, அவர்கள் வாழ முடியாது.

முத்துந. : சட்டம் செய்த நீங்கள் அதை மாற்ற முடியுமா?

அரசன் : முடியாது. மாற்ற ஒப்ப மாட்டேன்.

(இதே நேரத்தில் அரசன் தலையில் மணிமுடியை முத்து நகை, பொருத்தி மறைகிருள். அரசன் திரும்பிப் பல பக்கமும் பார்க்கிருன். அவன் யாரையும் காண முடிய வில்லை.

முத்துந : உங்கள் மனவிருள் நீங்க வேண்டும்.

அரசன் : பூப்பட்டது போல் உன் கை பட்டது என் தலையில். நீ தொட்ட இடத்தில் சுறுக்கிட்ட இன்பம் உன் உடலின் ஒவ்வோரணுவையும் கவர்ந்தது. என்னை இழந்தேன். எதிரில் வா! காதல் எனும் நெருப்புக் குழியினின்று தாண்டிக் குதிக்க இன்பக் குளிர் ஓடையே எதிரில் வா!

என்னைக் காப்பாற்று! பெண்ணே!..........பெண்ணே ஏன் பேசவில்லை! பெண்ணே......... போய் விட்டாள்.

(மயங்கி நிற்கிறான். நினைப்பில் ஆழ்கிறான்.)

அவள் ஒரு தாழ்ந்த பிறவி...... ஆயினும்...... உயர்ந்த கொள்கை உடையவள்......விரும்பத்தக்க பண்புடையவள். மண்ணுளும் மன்னன் கருத்துக்கும் மறுப்புரைத் அந்த மடமங்கை........ கண்ணெதிரில் தோன்றாமல் கருத்தைக் கவர்ந்த காதல் மின்வலி! பெண்ணே! ......... பெண்ணே! (கையில் வாளை உருவுகிறான்.) என் தோள் நான் சொல்வதைக் கேட்கவில்லை. அவளால் எனக்கேற் பட்டிருக்கும் நிலை, காதல் தானா? வெறுப்பா? வியப்பா? நடுக்கமா?

இரக்கமற்றவள்!

இருக்கின்றாயா இளமங்கையே! இருக்கின்றாயா ஆக்க மற்றவளே!

(வெளியில் செல்லுகிறான். மீண்டும் வருகிறான். அவன் கண்கள் பிச்சை கேட்கின்றன. மறு நொடி நெருப்பைக் கக்குகின்றன. உலக்கைகளை ஒவ்வொன்றாய் வாளால் சாய்க்கிறான். பொதுச் சாவடியின் உட்புறத்து வெட்ட வெளியை நோக்குகின்றான். ஏமாந்த உள்ளத்தோடு வெளிசெல்லுகிறான்; வெளிப்புறத்தில் அவளைத் தேடுகின் றன அவன் கண்கள்.)

## காட்சி—பதிமூன்று

இடம் : புத்தூர்ப் பொதுச் சாவடிக்குச் சற்றுத் தொலைவில்.

நேரம் : ஒடி

கா. உ : முத்துநகை; பொன்னி, அரசன், அமைச்சன்.

நிகழ்ச்சி : ஆராய்ச்சி.

முத்துநகை : (ஊர்ப் பொதுச் சாவடியினின்று விரைவாக நடந்துசெல்லுகிருள். தோழி எதிரில் வருகிருள்) நீ தானு? என்ன நடந்தது.

பொன்னி : அமைச்சர் என் வலேயில் சிக்கினர். அவரின் எதிரில் ஆடிப்பாடி நான் பார்வதியின் தோழியாய் இருந் தேன். என் குற்றத்திற்குக் கழுவாயாக நான் இழிபிறப் பெடுத்து உங்களை மணக்க நேர்ந்தது என்று புளுகி அமைச்சரை மணந்து கொண்டேன்.

முத்துந : அடாடா எதிர்பாராத வெற்றி உனக்கு ஏற் பட்டது.

பொன்னி : ஆளுல், முத்துநகை, நான் நிறைவேற்ற முடியா ததான ஓர் உறுதியை அமைச்சருக்குக் கூறிவிட்டேன். "பார்வதி உன்னே அரசராக்கச் சொல்லியிருக்கிருள், அதன் படி உன்னே நான் இந் நாட்டுக்கு அரசராக்குவேன்" என்று கூறினேன். அமைச்சரோ, அதே நினைவாக இருக்கிருர்.

முத்துந : நேரத்திற்கு ஏற்றபடி வாயில் வந்ததையெல்லாம் உளறிவிட்டார், இருக்கட்டும். நீ கூறியதை அவன் எவ்வாறு நம்பினன்?

பொன்னி : நம்பாமலா! பார்வதி, நான் நினைத்தபோ தெல்லாம் என் உள்ளத்தில் தோன்றி உதவி செய்கிருள் என்று கூறியிருக்கிறேன். அவள் தந்த "புதுமைக்கோல்" என்று இதோ இக் கோலேயும் காட்டினேனே!

முத்துந : இந்தப் புளுகு, உன்னேக் காப்பாற்றக்கடவது. அமைச்சன் எங்கே?

பொன்னி : அமைச்சர் என்று சொல்ல கூடாதா? அமைச்சன் என்று தாழ்வுபடுத்திக் கூறுகிருயே! இப்போதுதான் எனக்கு இன்பந்தந்து, பிரிந்து போனர். அரசரை எதிர் நோக்கி இப் பக்கத்தில்தான் சுற்றிக் கொண்டிருப்பார். நாளேக்குத்தான் அங்கு நானும் அவரும் கூடுவோம்.

முத்துநகை அதோ அமைச்சர்! நாம் மறைந்து கொள்வோம்.

முத்துந : ஓகோ! அதோ அரசரும் எதிரில் வருகிருர். நாம் இந்த ஆலின் புறத்தில் மறைந்திருந்து நடப்பதை அறிவோம்.

(மறைந்து கொள்ளுகிருர்கள், சற்றுத் தொலேவில் அரசரும் அமைச்சரும் சேர்ந்து கொள்ளுகிருர்கள்!)

அரசன் : அமைச்சரே!

அமைச் : ஆம் அரசே! மணிமுடி கிடைத்துவிட்டது போலும்!

அரசன் : மணிமுடி பெற்றேன், மங்கையைப் பெற்றேனில்லே. அவள் என் கருத்தில் காட்சியளித்தாள். கண்ணில் காட்சியளிக்கவில்லே. ஆடும் அடிச்சிலம்பின் இன்னெலி கேட்டேன், ஆராவமுதப் பாடல் கேட்டேன். ஆயினும் அவளேக் கண்ணுரக் காணப் பெற்றிலேன். சாதியில் உயர்வு தாழ்வு உண்டா என்ருள். ஆம் என்றேன். பிறர் கொள்கையை நீ ஏன் மேற் கொள்ளுகிருய் என்ருள். நன்மை விளேப்பதால் என்றேன். மனவிருள் நீங்க வேண்டும் என்று கூறி மணிமுடி தந்து போனுள். இப் பக்கத்தே அவளேத் தேடுவேன். சிறிது நேரம் நீர் இங்கே இருப்பீர்!

(அரசன் மறுபுறம் செல்லுகிருன்)

பொன்னி : நீ ஏன் நான் செய்கதுபோல் செய்யவில்லே?

முத்துநகை : அமைச்சன் மூட நம்பிக்கையுடையவன். ஆரியர் கொள்கையின் அடிமை, அவன் உன்னிடம், உன் கட்டுக்கதைக்கு ஏமாந்தான். அரசன் அப்படியில்லே, தன்னலத்துக்காக—அரச செல்வத்தைப் பிறர் அடையக் கூடாதே என்பதற்காக முற்பிறப்புக் கொள்கையையும்

சாதிக் கொள்கையையும் கடைப்பிடித்திருக்கிறான். இந்த நிலையில் என்னை அவன் ஏற்றுக்கொள்வான் என்பது உறுதியில்லை. அவன் மனவிருள் நீங்க வேண்டும். அதோ வருகிறார்கள், முள்ளியும், வள்ளியும் அவர்களை அப்புறத்திலேயே மடக்கி அழைத்துக் கொண்டு போக வேண்டும் வா!

(வேறு புறத்தில்)

முத்துநகை : முள்ளி! நீ என்ன செய்தாய்?

முள்ளி : படைத்தலைவர் வந்தார். எதிரில் ஓடினேன், "கரடிப் பட்டிக்கள்ளர்கள் அரசரைக் கட்டிக் குதிரைமேற் போட்டுக் கொண்டு அதோ போகிறார்கள் என்றேன்'' ஓடுகிறான் படைத்தலைவன்.

முத்துந : அப்படியா? வள்ளி நீ என்ன செய்தாய்?

வள்ளி : அரசி வந்தாள். நான் சொன்னேன். அரசர் வந்தார் அவரை, எதிர்பார்த்து நின்ற ஒரு மங்கை அவரைத் தழுவிக் கொண்டாள். இருவரும் அரண்மனைச் சோலையில் உள்ள விடுதிக்குச் சென்றார்கள், என்றேன். ஓடுகிறாள் அரசி. எனக்கொரு முத்துமாலை கொடுத்தாள்.

முத்துந : நடைமுறை மிக்க விரிவடைந்து விட்டது. ஒன்று செய் பொன்னி! அமைச்சன், அரசனை ஒருபுறம் மறைத்து வைக்க வேண்டும். பார்வதி கூறியதாக உன் அத்தானிடம் கூறிவிடு, ஓடு.

பொன்னி : எப்படி முடியும் அமைச்சரால்?

முத்துந : மூடக் கொள்கைதான் இன்று ஆட்சி நடத்துகிறது நாட்டில். அமைச்சர்தாம் அம் மூடக் கொள்கையின் தலைவர், அவரால் முடியும். விரைவில் போ.

பொன்னி : அமைச்சர் அரசராய் விடுவாரா?

முத்துநகை : இப்போது இதற்கு விடைசொல்ல முடியாது. விரைவாகப் போ.

(பொன்னி ஓடுகிறாள்.)

(பொன்னி போனபின்)

முத்துநகை : முள்ளி, நீ, பழம் விற்பவள்போல் நகரில் பல பகுதிகளிலும் திரிந்து கொண்டிரு. இரண்டு நாழிகைக் கொருமுறை நகரில் நடப்பதை எனக்குத் தெரிவித்துப் போக வேண்டும். வள்ளி, நீ ஆண் உருவுடன் குரங்கு காட்டியாக அரண்மனையின் உள்ளே நடப்பதை அறிந்து எனக்கு அடிக்கடி வந்து கூறிப்போ. உங்கள் இயற்கை அழகை மாற்றிக்கொள்ள வேண்டும். நான், நம் சிற்றூரின் ஏரிக்கரை அரசடியில் உங்களை எதிர்பார்த் திருப்பேன். விரைவில் செல்லுங்கள். உன் வீட்டில் நீ வளர்க்கும் குரங்குகளைக் கூட்டிக் கொள்.

(போகிறார்கள்)

## காட்சி—பதினான்கு

இடம் : நகர வீதிகள்

நேரம் : விடியல்.

கா.உ. : நகர மக்கள்.

நிகழ்ச்சி : ஊர்ப் பேச்சு.

ஒருவன் : அரசர், பெண்ணொருத்தியைத் தேடிக் கொண்டு நள்ளிருளில் தனியே சென்றார். கொள்ளைக்கூட்டத்தார். அரசரைக் கட்டிக் குதிரைமேல் போட்டுக் கொண்டு பிடித்தார்கள் ஓட்டம்.

2 வதுஆள் : பிடித்துக் கொண்டுபோய் என்ன செய் வார்கள்?

3 வதுஆள் : என்ன செய்வார்கள், நம் அரசனுக்குப் பகை வனை நடு நாட்டானிடம் கொடுத்தால், நடு நாட்டான் கொள்ளைக் கூட்டத்தாருக்குப் பரிசாக ஊரோ உடை மையோ கொடுப்பான்.

4 வது ஆள் : ஆனல், ஒன்று; படைத் தலைவர் தம் படையுடன் தேடிப் போயிருக்கிறார். கொள்ளைக்காரரைக் கண்டு பிடித்துவர அவரால் முடியாது? அரசரை எப்படியும் மீட்டு வந்து விடுவார்.

5 வது ஆள் : நம் வள்ளல் அரியநாத மன்னர், மங்கை ஒருத்தியைத் தேடிப்போனார் என்றால், அது ஒழுக்கமல்லவே.

6 வது ஆள் : அப்படியில்லை அது, ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட கெடுதியை நீக்கப் போயிருப்பார்.

7 வது ஆள்: அதற்கு தனியாக—அதுவும் அரசரே போக வேண்டுமா என்ன?

8 வது ஆள்: அதுதானே? வேறு ஒன்றுமில்லை. அயலான் மனைவியை அடித்துக் கொண்டு வரத்தான் போயிருப்பார்.

9 வது ஆள்: ஆரிய சாத்திரம் படிக்கிறார் அரசர். அதன் பிறகுதான் அவர் நடையில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன.

10 வது ஆள்: அரசி நிலை என்ன?

2 வது ஆள்: வேறு எவளையோ இழுத்துக் கொண்டு வந்து, சோலையில்—விடுதியில் வைத்திருக்கிறார் அரசர் என்று நினைத்து அழுதாள். அதன்பிறகு அந்த அழுகை இரட்டிப்பாய் விட்டது. அரசரையும் அரசின் வைப்பாட்டியையும் கொள்ளைக்காரர் கொண்டு போய் விட்டார்கள் அல்லவா?

## காட்சி—பதினைந்து

இடம்: கட்டுக்காட்டு மலை நுழை

காலம்: மாலை.

கா. உ: அரசன், ஆண்டியப்பன், அல்லி

நிகழ்ச்சி: ஐயப்பாடு

(கட்டுக் காட்டு மலை நுழையில் ஒரு புறம் அரசன் தறியோடு பிணிக்கப்பட்டிருக்கிறான். அவன் கை கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. அவன் எதிரில் அல்லி என்ற ஒருத்தி, உணவை எதிரில் வைத்து நிற்கிறாள்.)

அரசன்: உணவா? எனக்கா? அல்லி, என்னைக் கட்டி யிழுத்து வந்த அந்த முகமூடிக் கூட்டம் எது? ஏன் நான் இங்குக் கொண்டு வரப்பட்டேன்? கொண்டு வந்தவர்களின் நோக்கம் என்ன? உனக்குத் தெரியுமே!

அல்லி: "சொல்ல வேண்டாம்"– இது என் தலைவர்களின் கட்டளை. உணவுண்ணுங்கள். (இதற்குள் வெளியிலிருந்து ஒரு குரல் கேட்கிறது.)

குரல்: என்னடி செய்கிறாய் அங்கே இன்னும்?

அல்லி: சோறு கொண்டு வந்து அரசருக்குப் போட்டுக் கொண்டு இருக்கிறேன். சாப்பிடுங்கள் அரசரே!

அரசன்: அவர் யார்?

அல்லி: என் கணவர். கூப்பிடட்டுமா?— இப்படித்தான் வந்து விடுங்கள்.

(ஆண்டியப்பன் வந்து அரசனுக்குத் தலைவணங்க நிற்கிறான்.)

அரசன்: இப்படி என்னைக் கட்டிக் கொண்டு வந்தவர் யார் ஐயா?

ஆண்டி: சிவபெருமான்

அரசன்: கடவுளுக்குப் பேர் உண்டா? செயல் உண்டா? ஆட்களை அனுப்பி என்னைக் கட்டி இங்குக் கொண்டு வந்தது கடவுளா?

ஆண்டி: கடவுள் வராது. நீங்கள் முற்பிறப்பில் செய்த தீவினையின் செயல்.

அரசன்: முற்பிறப்பு உண்டா இல்லையா என்பது முடிவு பெருத செய்தி. தீவினைத் தொடர்பு நம்பத் தகாத தொன்று.

ஆண்டி: நீங்கள் முற்பிறப்பில் செய்த வினைக்கீடாக இன்ன பிறப்பில் இன்ன நாளில் இன்னபடி நடக்கும் என்று உங்கள் தலையில் எழுதி வைத்திருக்கும். ஏன் இதை மறுக்கிறீர்கள்.

அரசர்: இவை எல்லாம் ஆரியர் மூடக் கொள்கைகள்.

ஆண்டி: உலகில் மக்களின் ஏற்றத்தாழ்வு நிலைக்குக் காரணம் என்ன?

அரசன்: அதுவா?......

ஆண்டி: கேள்வி விளங்கவில்லையா—நீங்கள் அரசர்; நான் அடிமை; நீங்கள் செல்வர். நான் ஏழை; இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன என்றுதான் கேட்கிறேன்.

அரசன்: அதுவா?......

ஆண்டி: நீங்கள் மேலான சாதி. என் போன்ருேர் தாழ்சாதி காரணம்?

அரசன்: காரணம் என்ன என்று கேட்கிருய். அதுவா?........

ஆண்டி: வள்ளலே, உள்ளத்தை மறைக்காதீர்கள்.

அரசன்: உலக மக்களின் ஏற்றத் தாழ்வு நிலைமைகட்குக் காரணம் அவரவர்களின் அறிவு ஆற்றல்களே.

ஆண்டி: தெளிவான கருத்து. சாதியில்லை அல்லவா?

அரசன்: இல்லை.

ஆண்டி: மக்கள் யாவரும் நிகரா?

அரசன்: ஒரே நிகர்.

ஆண்டி: ஏன் இவ்வளவு கேட்டேன், என் அண்ணன் மகள் ஒருத்திக்கும் அடுத்த ஊர் அந்தணர் மகனுக்கும் உள்ளத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. மணக்கத் துடிக்கிறார்கள் இருவரும்! இந் நாட்டு சட்டம் வெட்டுகிறது. அவர்களின் ஒட்டுறவையே. அச் சட்டம் ஒழிந்ததல்லவா இப் போது?

அரசன்: மணந்தால்—மனம் ஒன்றுபட்டது. தெரிந்தால் சட்டம் தீங்கு செய்யும் அவர்கட்கு.

ஆண்டி: சாதியில்லை.

அரசன்: சட்டம் இருக்கிறது.

ஆண்டி: உங்கள் கருத்துக்கு மாறாக.

அரசன்: என் கருத்து மாறி இருக்கலாம்.

ஆண்டி: இன்னும் எவர் கருத்துத் திருந்த வேண்டும்?

அரசன்: அமைச்சர் கருத்துத் திருந்த வேண்டும், மக்கள் கருத்து மாறவேண்டும்.

ஆண்டி: மக்கள் தமிழர். நீவிர் அமைச்சருக்கு அஞ்சுவது இயல்புதான். அவர் முற்பிறப்பு, சாதி, முதலியவைகள் இருக்கவேண்டும் என்று கூறுவது உங்கள் நலத்துக்கு. ஆரியராகிய அவர் நலத்துக்கு. இந்தச் சூழ்ச்சிக் கருத்துகள் மக்களுக்கு விளங்கி வருகின்றன. அமைச்சர் உமக்கு எதிராக மக்களைக் கிளப்பிவிட்டு ஆட்சியைப் பறிப்பார் என்று நீங்கள் அஞ்சுதல் வேண்டாம்.

அரசன் : நீ யார்?

ஆண்டி : நான் ஆண்டியப்பன். அமைச்சர் உங்களை ஒழித்து, தாம் இந்த அரசைப் பறித்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறார். நீங்கள், ஆரியச் சட்டத்தை ஒழிக்கும் வழியில்தான், அவர் முயற்சியைத் தோற்கும்படி செய்ய வேண்டும். நான் நாளை வருகிறேன். ஒன்றை மறந்து விடவேண்டாம், யாரிடமும் நாம் பேசிக் கொண்டவற்றைச் சொல்லவேண்டாம். சொன்னால் தீமையடைவீர்கள்.

அரசன் : (வியப்பு) நல்லது.

(ஆண்டியப்பன், அல்லி போய் விடுகிறார்கள்)

## காட்சி—பதினாறு

இடம் : பாழில்லம்

காலம் : இரவு

கா.உ : அரசன், ஆண்டியப்பன், அல்லி, பழக்காரி,

நிகழ்ச்சி : நல்லதோர் ஏற்பாடு

அல்லி : என்ன ஆண்டியப்பா! நல்ல ஆண்டியப்பன், உன் குரல்கூட ஆண் குரலாகவே மாறிவிட்டது.

ஆண்டி : உன்னையும் சிறிதுகூட அடையாளம் தெரியவில்லை. மாற்றுடையைக் களைந்துவிடு, உன் மணவாளர் வரும் நேரம். என்ன வியப்பு? முள்ளியா வருகிறாள். அவள்தானே பழக்காரி. (அருகில் வந்த முள்ளியை நோக்கி) நீ யார் பழம் விற்பளா? என்ன பழம்?

முள்ளி : மாம்பழங்க, நல்ல பழம், மாதிரி வேணுமா. புசித்துப் பார்த்து வாங்குங்க.

ஆண்டி : உன்னை எங்கேயோ பார்த்தாப்போல் இருக்கிறதே, நீ ஒரு கழைக் கூத்தாடிகளில் இனத்தவள் இல்லையா?

முள்ளி : இல்லிங்க, இல்லிங்க. தோட்டப்பட்டு எங்க ஊரு அங்குள்ள பழந்தானுங்க இது...அட்ட பணப்பையை அங்க வைச்சுட்டு வந்துட்டேன் (என்று கூறி, ஓடத் தொடங்குகிறாள்.)

ஆண்டி : நில்லு நில்லு, நான் முத்துநகை, இவள் யார் பார்.

முள்ளி : அடாடா கண்டு பிடிக்கவில்லையே நான். இப்போது தெரிகிறது அவள் வள்ளி. அது கிடக்கட்டும், புதுச்செய்தி சொல்லிப் போக வந்தேன். அரசரைக் கரடிப்பட்டிக் கள்ளரிடமிருந்து மீட்க சென்றுரல்லவா படைத் தலைவர் அவர் அமைச்சருக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

முத்துநகை : என்னவென்று?

முள்ளி : கரடிப்பட்டி மலைக்குகையில் கள்ளர் அரசரைச் சிறையில் வைத்திருக்கக் கூடும் என்று நினைக்கக் காரணம் இருக்கிறது. உடனே கரடிப்பட்டிக் கள்ளிக் காட்டி லுள்ள சாவடி வந்து சேரும்படி, குதிரை மறவர் நூறு பேர், காலாட்கள் நூறுபேர் அனுப்பிவைக்கவும்.

முத்துந : நன்றாக உளறுகிறான் படைத்தலைவன். பொன்னி, உன் மணவாளராகிய அமைச்சரிடம், அவன் கேட்ட படையை அனுப்பவேண்டாம் என்று கூறு. பார்வதி கூறியதாக, நானும் ஒரு வேலை செய்கிறேன். அரசர் குதிரை எங்கே, எனக்கு வேண்டும்.

(பொன்னி பிடித்து வருகிறாள்.)

முத்துந : முள்ளி பழையபடி காலையில் பழக்காரியாக அங்கிரு. என்னை நகரத்துக் கோயிலின் பின்புறம் பதினொரு மணிக்கு எதிர்பார்த்துக் காத்திரு. பொன்னி அமைச்சர் வரும் நேரம், அவன் நடந்துகொள்ளவேண்டிய முறையை நாளைக்குக் கூறுவதாகப் புளுகிவை. (முத்துநகை ஆண்டி யப்பனுகவே குதிரையேறிப் போகிறாள்.)

## காட்சி—பதினேழு

இடம் : கரடிப்பட்டி.

காலம் : நள்ளிரவு

கா. உ. : முத்துநகை, படைத்தலைவன், போர் மறவர் ஐவர்.

நிகழ்ச்சி : கேலிக் கூத்து

முத்துந : (ஆண்டியப்பனுகவே) குதிரையிற் சென்று, கரடிப் பட்டி மலைக்குகையிலே எதிரிலுள்ள தேக்குமரத்தில் தான் ஏறி வந்த "அரசன்குதிரை"யைக் கட்டி வைத்துவிட்டுப் படைத்தலைவன் தங்கியிருக்கும் சாவடிக்குக் கால் நடையாக வருகிறுள்.

படைத் தலைவன் குதிரையும் மற்றும் ஐந்து பேர் களின் குதிரைகளும் ஒரு புறம் கட்டப்பட்டிருப்பதைக் காண்கிறுள். பச்சிலை பறித்துச் சாவடியின் சுவரில் எழுது கிறுள்.

கள்ளரைப் பிடித்து, அரசரைக் காக்க வந்தீர். தூங்கு கின்றீர். தூங்குபவரைத் தொலைப்பது அறமல்ல என்று விட்டோம். கரடிப்பட்டி மலைக்குகைக் கள்ளரோடு போர் தொடுக்க விரும்பினுல் தொடுக்க. வலி இல்லாவிட்டால் அமைச்சர் தலையை எமக்கு காணிக்கையாய்ப் படைத்து அரசரை மீட்க.

இப்படி,

கரடிப்பட்டி மலைக்குகைக்
கள்ளர் பெருமக்கள்

(இவ்வாறு எழுதிவிட்டு, ஐந்து குதிரைகளை அவிழ்த்து விட்டுப் படைத் தலைவனின் குதிரைமேல் ஏறிக் கொண்டு சென்று விடுகிறுள்.)

## காட்சி—பதினெட்டு

இடம் : காட்சி மன்றம்

காலம் : மறுநாள் காலை

கா.உ : பொது மக்கள், அரசன் முதலியவர்

நிகழ்ச்சி : சூழ்ச்சி, வஞ்சம்.

(பொது மக்கள் காட்சி மன்றில் நிறைந்திருக்கிறார்கள். அமைச்சன் வீற்றிருக்கிறான். அரசின் அலுவல்காரர் சிலர்.)

அமைச்சன் : பெருமக்களே, அறிஞர்களே! நம் அரசர்க்குக் கேடுகாலம் கிட்டியதால், அவர், கண்ட மங்கையரைக் கைப் பிடித்திழுக்கத் தலைப்பட்டார். கடைசியில் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு நள்ளிரவில் நாடு சுற்றி திரிந்தார்.

கரடிப்பட்டிக் கள்ளரால் கைப்பற்றப்பட்டார், கரடிப் பட்டிக் குகையில் எதிரில் அரசர் குதிரை காணப் பட்டது. கள்ளர்கள், ஒரு செய்தி விடுத்துள்ளார்கள் தம் குடிசையிலிருந்து! அரசர் வேண்டுமானால், அமைச்சர் தலை எமக்கு வேண்டும். அல்லது போருக்கு வாருங்கள். அரசரை மீட்க படைத் தலைவர், குகைக்கு அருகிலுள்ள சாவடியில் ஐந்து மறவருடன், உதவிப் படை கேட்டுக் காத்திருக்கிறார். இது நிலைமை. என் கடமை என்ன? நான் நினைக்கிறேன், எனை நீங்கள் அரசனுக்குங்கள். அரசரை மீட்கும் வரைக்கும் நான் படையைப் படைத் தலைவருடன் ஒத்துழைக்கும்படி கூறி, அனுப்புகிறேன். அரசரை மீட்கிறேன். ஆனால், அரசர் மீட்கப்பட்டபின், அவரை மீண்டும் அரசராக்குவதில் எனக்கு விருப்பமில்லை. படைத்தலைவர் விழிப்பின்மையால்தான் இத்தனை மானக் கேடுகள். படையில் ஒழுங்கின்மை ஏற்படுகின்றன. அவரையும் நீக்கவோ திருத்தவோ எனக்கு அதிகாரம் தேவை.

பெருமக்களில் ஒருவன் : எங்களுக்கு ஒன்றும் தெரியாது ஏற்றபடி செய்யுங்கள்.

(உதவிப் படைத் தலைவன் எழுந்து அரச முடியைக் கையில் எடுத்துக் கூறுவான்.)

பெருமக்களே, இந்த முடியை உங்கள் பேரால் அமைச்சருக்கு சூட்டுகிறேன்.

(முடி சூட்டுகிறான்)

உதவி : ஏன் நீங்கள் கைதட்டி மகிழ்ச்சி தெரிவிக்கவில்லை.

ஒருவன் : எங்களுக்கென்ன தெரியும்?

அமைச்சன் : சிவபெருமான் அருளாலும், உங்கள் கோரிக்கையாலும் நான் அரசன்.

நன்னெறியில் என் ஆட்சியை செலுத்த எல்லாம் வல்ல சிவபெருமான் துணை செய்க.

(அனைவரும் கும்பிட்டுக் கொண்டே போகிறார்கள்)

## காட்சி—பத்தொன்பது

இடம் : கட்டுக்காட்டு மலை நுழை.

காலம் : மாலை இரண்டு மணி

கா. உ. : ஆண்டியப்பன், அல்லி.

நிகழ்ச்சி : காப்பளித்தல்

ஆண்டி : அரசே, படைத்தலைவர் கேட்டபடி உடனே படை அனுப்பவில்லை, அமைச்சன். அதன் பிறகு, அவனுடை புது மனைவியின் விருப்பப்படி, பொது மக்களைக் கூட்டினான் இன்று காலை. எழுத்து மணமில்லாத பொது மக்கள் எதிரில், தானே அரசன் என்றான். உதவி படைத் தலைவனாகிய நீலன் பொது மக்கள் பேரால் அமைச்சனுக்கு முடி சூட்டினான். அப்போது உண்டாகத் தக்க

பொய்ப் பழி கூறினன். இனி உங்களை அரசனுக்க மாட்டானும். படைத் தலைவரையும் நீக்கிட விட வேண்டும் என்றான் பொது மக்களிடம். நீர்ந்தது இப்போது நடைபெறுவது: படை மறவர்களையும், உதவிப் படைத் தலைவர்களையும், கூட்டிப் போகிறான்.

அவர்கள் சென்று படைத் தலைவரைக் கொல்ல வேண்டுமாம். அரசரைக் கொண்டு வந்து சிறையில் போட வேண்டுமாம். ஒரு கட்டளை எழுதித் தாருங்கள் படைத்தலைவருக்கு. படைத் தலைவரே, நீர் அவ்விடத்தை விட்டு உடனே இவ் வஞ்சல் தருவோருடன் வந்து என்னைக் காணுக. மாற்றுருவுடன் என்று!

(உடனே அரசன் எழுதித்தர ஆண்டியப்பனுகிய முத்துநகை பெற்றுக்கொண்டு குதிரை யேறிச் செல்லுகிறான். அல்லி முகவாட்டத்துடன் சென்று மறைகிறாள்.)

## காட்சி—இருபது

**இடம் :** அரண்மனை.

**காலம் :** மாலை ஆறுமணி.

**கா. உ :** தெய்வமாடி, அரசி.

**நிகழ்ச்சி :** மடமையில் நம்பிக்கை.

**அரசி :** தெய்வமாடியே, உன் தெய்வத்தை வரவழைத்துக் கொடு. தோழியே, அவள் கேட்பன கொண்டு வந்து கொடு.

(அரிசி குவிக்கப்படுகிறது. மற்றும் நகைகள். பிறகு தெய்வம் வருகிறது. தெய்வம் ஆடிமேல்.)

**தெய்வம் :** ஏன் அழைத்தாய் அரசியே.

**அரசி :** என் மணவாளர் நிலை என்ன?

தெய்வம் : அவர் கரடிப் பட்டிக் கள்ளரிடம் பிடிபட்டிருக்கிறார். அவரோடு ஒரு மங்கை இருக்கிறாள்.

அரசி : அந்த மங்கை தன் உருவை மறைத்துக் கொள்ளுகிறான். அது எப்படி?

தெய்வம் : தன் உருவை சிறு பொருளில் மறைத்துக் கொள்ளுவதென்பது விச்சுவி என்னும் வேலை. அது கழைக் கூத்தைச் சார்ந்தது.

அரசி : ஆ அப்படியா? அந்த மங்கைக்கு விச்சுவி தெரியுமா?

தெய்வம் : தெரியும்.

அரசி : அரசர் நிலை என்ன ஆகும்?

தெய்வம் : அவரை இங்கிருந்து புறப்பட்டிருக்கும் உதவிப் படைத் தலைவர் கொன்று விடுவார்.

அரசி : ஐயோ தப்ப முடியாதா?

தெய்வம் : தப்ப முடியாது. படைத் தலைவரையும் கொன்று விடுவார்கள்.

அரசி : என் நிலை என்ன?

தெய்வம் : நீ எங்கேயாவது ஓடி விடுவாய் அமைச்சனுக்கு அஞ்சி.

அரசி : அதுதான் சரி. (தெய்வம் மலையேறிய பின் எழுந்து அரிசியை அள்ளுகிறது. அதே நேரம் ஆண்டியப்பன் இரண்டு கிழவருடன் அங்கு வருகிறான். அரசி கருப்புடையாமல் முக்காடிட்டு வெளிக் கிளம்புகிறாள். தோழியும் உடன் புறப்படுகிறாள்.)

ஆண்டி : அம்மா! இந்த இரண்டு பெரியார்களும் உமக்கு ஏதோ அறிவுரை கூற வந்துள்ளார்கள்.

கிழவர் : எங்கே புறப்பாடு?

அரசி : இந்நேரம் என் மணாளர் இறந்திருப்பார். என்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், என் மணாளரின் உடலை எரிக்கவும் நான் செல்ல வேண்டும்.

கிழவர் 1: இப்படி, யார் சொன்னார்கள்.

அரசி : இந்தத் தெய்வமாடி மேல் அந்த தெய்வம் சொல்லியது.

கிழவர் 2 : படைத் தலைவர் வரும் வரைக்குமாவது நீங்கள் இருக்கலாகாதா?

அரசி : படைத் தலைவரும் இந்நேரம் இறந்திருப்பார்.

கிழவர். 2; சொன்னவர் யார்?

அரசி : தெய்வம்

கிழவர் 1: அரசர் எங்கிருக்கிறார்?

அரசி : ஒரு மங்கையுடன் கள்ளரிடம் அகப்பட்டார்.

ஆண்டி : யார் சொன்னார்?

அரசி : தெய்வம்

ஆண்டி : ஐயோ தெய்வமே!

கிழவர் 1: பெண்ணே நான்தான். (தன் கிழவர் உருவைக் கலைத்து உரிய உருவத்துடன் நிற்கிறான் அரசன்.)

கிழவர் 2: அன்னையே நான்தான் படைத்தலைவன்.

அரசி : (தெய்வமாடிமேல் சீறிச் சொல்லுகிறாள்) பொய்ப் பிழைப்புக்காரியே!

ஆண்டி : அம்மா அவளை விடுங்கள். பிழை நம்முடையது. நம்முட நம்பிக்கையை ஏழைகள் பயன்படுத்திக் கொள்ள நினைத்தது குற்றமாகாது.

அரசி : அத்தான் அமைச்சன் தங்களைக் கொல்லப் படை அனுப்பினானே.

அரசன் : வரட்டுமே.

அரசி : உம்மோடு கூட்டிச் சென்ற மங்கை எங்கே?

அரசன் : செய்தியே பொய்! தெய்வத்தின் பேச்சை இன்னும் நம்புகிறாய்.

அரசி : கள்ளர் பிடிக்கவில்லையா உங்களை?

ஆண்டி : இல்லை.

அரசி : படை சென்றிருக்கிறதே கள்ளர் குகைக்கு. அங்கு உங்கள் குதிரையும் காணப்பட்டதாமே.

ஆண்டி : காணப்பட்டால்? படை சென்றது குகைக்கு. உதவிப்படைத் தலைவர்குகையை நெருங்கலாமா நெருங்க கூடாதா என்று எண்ணிக்கொண்டே இருக்கிறார். பொழுது விடிந்தால் திங்கட்கிழமை என்றும் இராகு காலம் கள்ளிப் போர் தொடங்குவதென்றும் திட்டமிட்டிருக்கிறார். வெற்றி கிடைக்குமா தோல்வி ஏற்படுமா என்று பிள்ளையார் பிடித்து வைத்துப் பூ வைத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார், இப்போது.

அரசன் : படைத் தலைவரே, படைவீட்டில் சென்று மீதியுள்ள படை மறவரை வாளும் கையுமாக அழைத்து வாரும். இதே இரவில். அமைச்சன், உதவிப் படைத்தலைவன் என்னையும் உம்மையும் கொன்று திரும்புவதை எதிர் பார்த்து எல்லைப் புறத்தில் நின்றிருக்கிறான்.

படை : நன்று. நீங்கள் இங்கேயே இருங்கள் (போகிறான்)

## காட்சி—இருபத்தொன்று

இடம் : எல்லைப்புறம்

காலம் : காலை

கா. உ : அரசன், படை

நிகழ்ச்சி : ஏமாற்றம்.

(உதவி படைத்தலைவன் முன்னே குதிரைமேல் வருகிறான். படை பின்னே வருகிறது.)

அமைச்சன் : (உதவிப் படைத்தலைவனை நோக்கி) வெற்றியா? தோல்வியா?

உதவி : அரசன் காணப்படவில்லை. படைத் தலைவன் இல்லை. குகை இருக்கிறது. உள்ளே யாருமில்லை. அரசன் குதிரை அங்கிருக்கிறது.

அமைச்சன் : அப்போதே எனக்குத் தெரியும். இங்குக் கீழ்ப் புறத்தில் பல்லி சொல்லியது.

உதவி : நானும் பிள்ளையார் தலையில் பூ வைத்துக் கேட்டேன். தோல்வி என்று விடை கிடைத்தது.

(இதே நேரத்தில் பொன்னி, உரிய உருவத்துடன் அமைச்சன் எதிரில் குதிரை மேல் வருகிறாள்)

அமைச்சன் : பெண்ணே என்ன புதுமை?
(தனியாக ஒருபுறம் செல்லுகிறார்கள்.)

பொன்னி : மலைமகள் சொல்லுகிறாள் என் உள்ளத்தில் தோன்றி. அதை கேட்க:
சிவலோகம் என்பது பொருவெளியில் மூழ்கிவிட்டது.
சிவன் என்ற பேரும் பொருளற்றதாகி விடவே
அப்பெயரால்குறிக்கப் பெற்ற அப்பொருளும் பரம்
பொருளோடு கலந்துவிட்டது.

அமைச்சன் : ஐயையோ! அப்படியானால். கடவுள் திருவிளையாடல் பற்றிய புராணங்கள், இதிகாசங்கள், மந்திரங்கள், சடங்குகள், கோயில்கள் என்ன ஆகும்!

பொன்னி : மக்களின் மடமை இருக்கும் வரைக்கும் இருக்கும்?

அமைச்சன் : இருக்கும் அல்லவா?—மடமை நிலைத்திருக்க நான் கல்வியைத் தலையெடுக்கவொட்டாமல் தடுத்து விடுகிறேன்.

பொன்னி : அரசனும், படைத்தலைவனும் அரண்மனையில் உம்மை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**அமைச்சன் :** ஐயையோ, பொய்தானு மலைமகளே.

**பொன்னி :** மலைமகள் கடைசியாக ஒரு வார்த்தை கூறுகிறள். உனக்கு மன்னிப்புக் கிடைக்கும். மலைமகளும் மீளாவிடை பெற்றுக்கொள்ளுகிறர். மீதி இருப்பவள் பொன்னி தான்.

**அமைச்சன் :** (நடுக்கம்) பொன்னி, நம் வாழ்வு என்ன ஆவது?

**பொன்னி :** நீர் அரசரை மன்னிக்கக் கேட்டுக் கொள்ள வேண்டும். ஆரியர் தீயொழுக்கத்தை ஆதரித்துப் பேச வேண்டாம். சாதியில்லை, மதம் இல்லை, வாரும் போக லாம்.

## காட்சி—இருபத்திரண்டு

**இடம் :** அரண்மனை

**காலம் :** மறுநாள் காலை

**கா. உ.:** அனைவரும்

**நிகழ்ச்சி :** உண்மை உணர்வு

மணிமுடி புனைந்த அரிய நாத வள்ளல் அரியணை மேல் அரசியுடன் வீற்றிருக்கிறன். அமைச்சன் தலை நாணி ஒரு புறம் நிற்கிறன். உதவி படைத்தலைவன் அவ்வாறு. படைத் தலைவன் அலுவல் உடையுடன் ஒரு புறமும் பெருமக்கள் அறிஞர் எதிரிலும், அமர்ந்திருக்கிறர்கள்.

**அரசன் :** பொதுமக்களே,

தமிழர் கொள்கை மங்கிய அளவு அறிவின்மையும் அறிவற்ற செயல்களும், மூடநம்பிக்கைகளும் மக்களிடம் வளர்ந்தன. அமைச்சனின் மூடநம்பிக்கையும் மதவெறி யுமே அவரை பேராசைக்குள்ளாயின. அவரை மன்னிக் கிறேன். அவர் கொள்கை, மதம், சாதி, உருவ வணக்கம்

முதலியவற்றைத் தலை கவிழ்க்கிறேன். முற்பிறப்புக் கொள்கை சரி அல்ல. ஒருவன் நன்மை தீமைக்கு அவன் நற்செயல் தீச்செயல், அறிவு அறியாமை ஆற்றல் ஆற்றலின்மை காரணம் என்று நம்புகிறேன். என் அரசை நான் பெற்றதற்கும் என்னுயிர் தப்பியதற்கும் காரணர் ஆண்டியப்பர்...

அவர் எங்கே?...அவர் வாழ்க.

நம் மகிழ்ச்சிக்குரிய இந்நாளை கூத்துக்காட்சியால் நிறைவு செய்வோம்.

அனைவரும் அரண்மனைக்கு வருவீர்கள்.

(அனைவரும் போதல்)

## காட்சி—இருபத்து மூன்று

இடம் : கழைக் கூத்தரயிடம்.

காலம் : மாலை

கா. உ: அனைவரும்

நிகழ்ச்சி : காதலும் தடையும்.

திறந்த வெளி. தோள் அளவு தடித்த மூங்கில் இடைவிட்டு மேல் கட்டிய பந்தல்! ஒருபுறம் அரசியும் அரசனும் வீற்றிருக்கிறார்கள். அமைச்சர் முதலியவர்கள் அண்மையில் இருக்கிறார்கள். பெருமக்கள் அமர்ந்திருக்கிறார்கள். பின்னணி இசை முழங்குகின்றது. நெடுந்தறி உச்சியாடல் குடத்தின் மேல் கொட்டியாடல், உடல் வளைத்தல், தலை கீழ் நடத்தல். காற்றில் மிதத்தல், அனலில் படுத்தல் முதலியன நடக்கின்றன. அனைவரும் கைகொட்டி மகிழ்கிறார்கள். கழைக்கூத்தாடிகளின் தலைவன் அவை நடுவில் தோன்றி கூறுகிறான்.

தலைவன் : அரசே, பெருமக்களே, எங்கள் தலைமை ஆட்டக்காரி இப்போது மூங்கிற் பந்தலில் ஏறி ஆடுவாள். அவள்

உடல் உங்கள் விழிக்குத் தெரியாது. சிலம்பொலி கேட்கும் இவ் வாடலின் பெயர்தான் விச்சுளி ஆட்டம்.

அரசி : (திடுக்கிட்ட முகத்தை நகைப்பால் மறைத்து) மணவாளரே, என் காதலரே, என்னுள்ளத்தை அறிய மாட்டீரா? இந்நேரம் நாம் கண்ட காட்சிகள் உங்கள் உள்ளத்தில் காதல் கிளர்ச்சியை உண்டாக்க வில்லையா? என் கையால் ஒரு சுருள் வெற்றிலை நறுமணங் கலந்த பாக்கு, வந்துவிடுவோம் விரைவில்.

அரசன் : விரைவில் வந்துவிடுவோம்.

(விச்சுளி நடந்தேறியது. அனைவரும் மகிழ்கிறார்கள். அரசியின் ஏற்பாட்டால் விச்சுளியாடிய முத்து நகை ஏமாற்றமடைகிறாள். வேறு ஆட்டக்காரன் சுத்தி சுழற்றுகிறான். அரசனும் அரசியும் வருகிறார்கள் (போகிறார்கள்)

அரசன் : விச்சுளி நடந்து விட்டதா

தலைவன் : ஆம்.

அரசன் : மற்றொரு முறை!

தலைவன் : முடியாது.

அரசன் : ஆ! எதிர்பார்த்தது கிட்டாமல் போயிற்று. வரிசை தந்து அனுப்பு படைத் தலைவரே.

(வரிசை நடக்கிறது. அனைவரும் போகிறார்கள்)

## இருபத்து நான்கு

இடம் : சோலை

காலம் : ஷ்டி

கா. உ. : அரசன், முத்துநகை, பொன்னி.

நிகழ்ச்சி : இன்ப நிகழ்ச்சி.

அரசன் : (பாடிக்கொண்டே வருகிறான். தன் கையிலுள்ள மடலைப் பார்த்து)

பாட்டு

மாகுன் றனைய பொற்றோளான்
வழுதிமன் வாழ் கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பாத்தெனைப்
பார்த்திலன். பையப் பையப்
போகின்ற புள்ளினங் காள், புறக்
கோட்டம் புகுவதுண் டேல்
சாகின் றனள் என்று சொல்லுவீர்
அன்றைச் சடையனுக்கே.

பொன்னி : (எதிரில் வந்து) உம்வரவை எதிர்பார்த்து வருந்தி கிடக்கிறாள் விச்சுளியாடிய முத்துநகை,மலர்ச்சோலையில்.

அரசன் : ஆம். இதோ அவள் அனுப்பிய மடல்.

(விரைந்து செல்லுகிறான்)

முத்துநகை : நானே மணிமுடி பறித்து மறைந்தாடி – இன்று விச்சுளியாடிய முத்துநகை.

அரசன் : இன்பத் தோற்றம்!

என் உயிரைக் காப்பாற்று.

முத்துநகை : சாதியுண்டா?

அரசன் : இல்லை.

முத்துநகை : மணந்துகொள்ள தடையில்லையே?

அரசன் : இல்லை

(தழுவிக் கொள்ளுகிறார்கள்)

முற்றும்